பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 27 ஞாயிற்றுக்கிழமை [11-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 194

இம்மாதம் வழங்க ஏற்கனவே ஏற்பாடாகி விட்டதால்

## உலர் உணவு நிவாரணம் அடுத்த மாதம் முதல் நிறுத்தம்

### பிரதேச செயலகங்களுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ், குடாநாட்டில் சுமார் 90 ஆயிரம் குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்தோர் குடும்பங்கள் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் நிவாரணம் அடுத்த மாதம் தொடக்கமே நிறுத்தப்பட உள்ளது.

இந்த மாதம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டு விட்டதால் அடுத்ந மாதம் தொடக்கம் நிவாரணம் நிறுத்தப்படும் என்றும்—

சமுர்த்தி திட்டத்தின் கீழ் புதிய திட்டம் அமுல் செய்யப்படும் என்றும்—

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரண நிறுத்தம் தொடர்பாக யாழ் செயலகத்துக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையைத் தொடர்ந்து அரசாங்க அதிபருக்காக உதவித் திட்டப் பணிப்பாளர் சி. நல்லையா சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி

[10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ உறுப்பினர் ஒருவர் வவுனியாவில் சுடப்பட்டார்

### புளொட் மீது குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 11

வவுனியா நகரில் ரெலோ உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 8–30 மணியளவில் இனந்தெரியாதோரினால் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ரெலோ அமைப்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயந்திரன் [வயது 24] என்பவரே சுடப்பட்டவராவார்.

இவர் தேநீர்க்கடை ஒன்றின் முன்னால் நின்றபோது அங்கு வந்த இனந் தெரியாதவர்கள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடிவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச்சூட்டினால் காயமடைந்த இவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்துப்பாக்கிச்சூட்டுக்குப் புளொட் அமைப்பே காரணம் என்று ரெலோ குற்றம் சாட்டியுள்ளது.

[இ–5–164-21]

# வன்னிக்கான பாதை தொடர்ந்து இழுபறியில்!

## வானொலிக்குள் கைக்குண்டு

கொழும்பு, ஜூலை 11

வானொலிப் பெட்டி ஒன்றினுள் பொருத்தப்பட்டிருந்த கைக் குண்டு ஒன்றை பொலன்னறுவைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

கதுருவெல என்னும் இடத்தில் வானொலிப் பெட்டிகள் திருத்தும் கடை ஒன்றில் திருத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட ஒரு வானொலிப் பெட்டியின் உள்ளேயே இந்தக் குண்டு காணப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அரச அதிபர் பலகல்லவுடன் சந்திப்பு

வவுனியா, ஜூலை 11

மாங்குளத்தில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு பாதை ஒன்றைத் திறப்பது தொடர்ந்து இழுபறி நிலையில் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஷ் நேற்று வன்னிப் பிராந்திய படைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவுடன் இது தொடர்பாகப் பேச்சு நடத்தினார்.

மாங்குளம் ஊடாக வன்னிக்குப் பாதை திறப்பது தொடர்பாக அரசிடம் விடுதலைப் புலிகள் சில உத்தரவாதங்களை எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவாதத்துக்கான பதில் விடுதலைப் புலிகளுக்கு செஞ்சிலுவை சர்வதேசக்குழு ஊடாக அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும்—

புலிகளின் பதில் கிடைத்த பின்னரே பாதை திறப்பது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேபாளத்துக்கும் பூட்டானுக்குமான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பினார்.

சார்க் அமைப்பின் தலைவர் என்ற வகையில் ஜனாதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மோதல்

திருமலை, ஜூலை 11

திருகோணமலை நகரில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஆண்டான் குளம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நேற்று மாலை மோதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

லங்கா முடித்த

## 1,200 பேருடன் இன்று காங்கேசன் புறப்பாடு

திருகோணமலை, ஜூலை 11

திருகோணமலை துறைமுகத்திலிருந்து ஆயிரத்து 200 பயணிகளுடன் லங்கா முடித்த கப்பல் இன்று காங்கேசன்துறை நோக்கிப் புறப்படுகிறது.

இந்தக் கப்பலில் மன்னாரிலிருந்து திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்ட 224 அகதிகளும் பயணம் செய்கிறார்கள்.

காங்கேசன்துறைக்கு செல்லும் லங்கா முடித்த கப்பல் அங்கிருந்து மீண்டும் 13 ஆம் திகதி பயணிகளுடன் திருகோணமலை நோக்கிச் சென்று பின் 15 ஆம் திகதி மீண்டும் திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி புறப்படும்.

(இ–5)

## முறைப்பாடுகளைப் பதிய யாழ். பொலீஸில் வசதி

### நாளை முதல் 4 நாள்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 11

காணாமல் போனவர்கள் தொடர்பாக இதுவரை முறைப்பாடு செய்யாதவர்களின் முறைப்பாடுகள் யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து வந்திருக்கும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளினால் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரை நான்குநாள்களுக்கு யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைத்து இவ்வாறான முறைப்பாடுகள் பதிவு செய்யப்படும்.

1996 ஜனவரியிலிருந்து 1999 ஜனவரி மாதம் வரையான காலப் பகுதியில் செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் காணாமல் போன

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாரம் அணிந்து கடற்றொழிலுக்கு செல்ல மீனவருக்கு அனுமதி மறுப்பு!

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 11

சாரத்துடன் கடற்றொழிலுக்குச் செல்வதற்கு கடற்றொழிலாளர்களுக்குப் படையினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகக் குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தினால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

நேற்றுக் காலை 5 மணிக்கு கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் சென்ற போது படையினர் அவர்களைச் சாரத்துடன் செல்ல அனுமதிக்கவில்லை என்றும் —

உள்ளாடை அணிந்தே இனிமேல் செல்ல முடியும் என்று படையினர் உத்தரவிட்டதாகவும் — முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் 512 ஆவது படையணி கட்டளை அதிகாரி கேணல் ஜெயதிலகவுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

மீனவர்களை சாரத்துடன் தொழில் செய்ய அனுமதித்தால் அவர்கள் சாரத்தைப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஷெல் வீச்சில் இரு ஹெலிகள் தப்பின!

கொழும்பு, ஜூலை 11

'வெலிஓயா' இராணுவத் தலைமையகத்தின் மீது கடந்த செவ்வாயன்று புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலின் போது அங்கு தரித்து நின்ற இரு ஹெலிக்கொப்ரர்கள் அதிர்ஷ்டவசமாகத் தப்பியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பதில் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவும் மற்றும் முப்படைத் தளபதிகளும் அந்த முகாமில் தங்கியிருந்த சமயமே புலிகளின் ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## வாசுவை மீண்டும் கட்சியில் சேர்க்கும் முயற்சி தோல்வி!

### செயற்குழுவில் ஆதரவு இல்லை

கொழும்பு, ஜூலை 11

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவை மீண்டும் ல. ச. ச. கட்சியில் சேர்க்கும் முயற்சி தோல்வி கண்டுள்ளது.

நேற்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வாசுதேவ நாணயக்காராவை கட்சியில் மீண்டும் சேர்த்துக் கொள்வதற்கு எதிராக 35 பேரும் ஆதரவாக 12 பேரும் வாக்களித்தனர்.

இதனை அடுத்து கட்சியில் இருந்து அவர் தொடர்ந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

வாசுதேவ நாணயக்காரா அரசில் இருந்து விலகி எதிர்க் கட்சி வரிசையில் சேர்ந்ததை அடுத்து கட்சி அவரை இடைநிறுத்தி இருந்தது தெரிந்

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடன் தேவை

★ அப்பியாசப் புத்தக றூலிங் வேலை தெரிந்தவர்கள்
★ பைண்டிங் வேலை தெரிந்தவர்கள்
★ அனுபவம் உள்ளவர்கள் ★ வேலை பழக விரும்புபவர்கள்

இருபாலாரும் 19 – 07 – 99 க்கு முன்
நேரிலோ அல்லது கடிதம் மூலமோ
மாலை 2 — 6 மணிக்கிடையில் தொடர்பு கொள்ளலாம்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**பஸ்ரியன் அச்சகம்** 402, பிரதான வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(67350)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி துரைராஜா

வட்டு. கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி துரைராஜா 3-7-99 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

இவர் கனகரட்ணம் துரைராஜா (கணக்காளர் லண்டன்) வின் அன்பு மனைவியும், அன்புச் செல்வன், கலைச்செல்வி, கருணைச்செல்வன் ஆகியோரின் பாச மிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-7-99) லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
திருமதி சற்குணம் நடராசா
(மைத்துனி)

''அறிவகம்''
பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

(67332)

## நாகமுத்து நடராசா

[ஓய்வு பெற்ற ஊழியர், துறைமுகக் கூட்டுத்தாபனம்]

கரம்பொன் கிழக்கு காளி கோயிலடியைச் சேர்ந்த நாகமுத்து நடராசா அவர்கள் 09. 07. 99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் ராஜகுமாரன் [கனடா], நகுலேஸ்வரி, சிவபாலன்[R. M. B.]அவர்களின் பாசமிகு தந்தையும், கெங்காதரன், றூபவதி, தயாபதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 11. 07. 99 இன்று கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. தியாகராசா
[பெறாமகன்]

41, யாழ். வீதி. [67347[

## கோபாலபிள்ளை கனகரத்தினம்

புலோப்பளை, பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை கனகரத்தினம் 08-07-1999 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளை — முத்தாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், தங்கமலரின் அன்புக் கணவரும், காராளசிங்கம் (லண்டன்), இராசம்மா (விசுவமடு) சிவலக்சுமி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும். செல்வராணி (லண்டன்), சிவஞானசுந்தரம் (முன்னாள் பொது முகாமையாளர், M.P.C.S விசுவமடு) உதயகுமார் [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சின்னப்பிள்ளை, சின்னையா, பொன்னம்பலம், காலஞ்சென்ற இளைய தம்பி மற்றும் பரமேஸ்வரி, சண்முகம், நல்லம்மா, சேதுகாவலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11-07-99 ஞாயிற்றுக்கிழமை பி. ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில நடைபெற்று பூதவுடல் புலோப்பளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோ. சேதுகாவலர்.
(இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.)

புலோப்பளை. (67346)

## சின்னப்பு தம்பித்துரை

நாவற்குழியைச் சேர்ந்த சின்னப்பு தம்பித்துரை 10-07-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னப்பு— யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், புவனேந்திரன் (பட்டினசபை, மல்லாகம்), பவளகேசன், சத்தியவதி, கரிகரன் நளாயினி (சர்வோதய ஆசிரியை), ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை, சிவபாக்கியம் அவர்களின் சகோதரரும், காலஞ்சென்ற மயில்வாகனத்தின் மைத்துனரும், நாகம்மா, மனோன்மணி, கருணாவதி, லோகநாதன் ஆகியோரின் மாமனாரும், ஆரணி, ஆர்த்தி, அபிராமி ஆகியோரின்பேரனும் ஆவார். அன்னாரின்இறுதிக் கிரியைகள் இன்று (11-7-99) காலை 10.00 மணிக்கு நாவற்குழியில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாவற்குழி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
த. புவனேந்திரன்
(மகன்)

நாவற்குழி. (67338)

## வீதியில் சென்ற ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு

இருட்டும் வேளையில் தொழில் முடிந்து சைக்கிளில் வீடு திரும்பிய குடும்பஸ்தர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதனால் அவருக்கு கையில் காய மேற்பட்டது.

கடந்த புதன் இரவு 7.00 மணிக்கு இத்தாவில் அம்பளாவளையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மலர் என அழைக்கப்படும் செல்லையா இரத்தினசிங்கம் (வயது 46) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வீதியின் குறுக்கே மரக்கிளைகள் போடப்பட்டிருந்ததால் சைக்கிளை மெதுவாக செலுத்தியபோது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார். (ஐ-117)

## கிராமசேவையாளர் பயிற்சிப் பட்டறை

கிராம சேவையாளர்களின் ஆற்றலை மேம்படுத்தும் முகமாகத் தீவுப்பகுதிக் கிராம சேவையாளர்களுக்கு நாளை திங்கட்கிழமை தொடக்கம் மூன்று நாள்களுக்கு ஊர்காவற்றுறை மீள்குடியேற்ற அலுவலகத்தில் பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்பட உள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் இப் பயிற்சிப் பட்டறை நடைபெற உள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள 425 கிராமசேவையாளர்களுக்கு இதுபோன்ற 20 பயிற்சிப்பட்டறைகளை நடத்த ஏற்பாடாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.


வெளிவந்துவிட்டது!
அசேதன இரசாயனம்
– தாக்கங்கள் –
மீட்டற் குறிப்புகள்
ஆக்கம்:
A. மகாதேவன்
B. Sc.
ஸ்ரீலங்கா
புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
(67351)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த
**ஜீன்ஸ்**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
[67341]

**ராஜா**
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
விஜய், தேவயானி, ரம்பா
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன்
வந்தாய்
நாளை முதல்
ரஜனி - குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**அண்ணாமலை**
[சி/8114]


## நாட்டில் பிச்சைக்காரரின் எண்ணிக்கை 50 ஆயிரம்!

கொழும்பு, ஜூலை 11

நாடெங்கும் உள்ள பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை 50 ஆயிரம் என்ற எண்ணிக்கையைத் தாண்டிவிட்டது.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் நந்தசேன ரத்னபால இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

பிச்சைக்காரர்களின் இந்த எண்ணிக்கை கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு ஆகும்.

சமூகத்தில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. அதிகமானோர் கீழ்மட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். நகரங்களை அண்டிய பிரதேசங்களிலேயே அவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

நாட்டிலேயே அதிகம் பிச்சைக்காரர்களைக் கொண்ட நகரமாக கொழும்பு விளங்குகின்றது என்று பேராசிரியர் நந்தசேன மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-8)

## செஞ்சிலுவை இளைஞர் வட்டம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி சீட்டிழுப்பு 10 - 07 - 99 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்குக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

1 ஆம் பரிசு இல. 2211
2 ஆம் பரிசு இல. 1711
3 ஆம் பரிசு இல. 0352

10 ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

| | | |
|---|---|---|
| 1) 0449 | 2) 1263 | 3) 2328 |
| 4) 1879 | 5) 2083 | 6) 2059 |
| 7) 0074 | 8) 0867 | 9) 0086 |
| 10) 0019 | | |

குறிப்பு: பரிசுப் பொருள்களை 30-07-99 க்கு முன்னர் பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி/8152) –அதிபர்

## இலங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி

மாணவர் மன்ற நிதிக்கான

### அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு

முதலாம் பரிசு — 504
இரண்டாம் பரிசு — 294
மூன்றாம் பரிசு — 2169

ஆறுதல் பரிசுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1580 | 1085 | 2075 | 1514 | 380 |
| 396 | 2165 | 753 | 1001 | 633 |

67354) தலைவர், மாணவர் மன்றம்.

## கண்ணீர் அஞ்சலி

யா/ கைதடி நவீல்ட் பாடசாலையில்
விடுதி உதவி மேற்பார்வையாளராகப் பணியாற்றிய

**திருமதி மீனாட்சி பாலச்சந்திரன்** அவர்கள்

9-7-99 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார். அவரின் பிரிவால் துயருறும் அவரது கணவர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

நவீல்ட் செவிப்புலனிழந்தோர்
பழைய மாணவர் சங்கம்,
கைதடி.

(67355)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனமாகிய பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கோப்பாய்,
பொதுமுகாமையாளர்

**மரியாம்பிள்ளை ஞானரெட்ணம்**

அவர்களின் பாசமிகு தாயார்

**மரியாம்பிள்ளை அன்னம்மா**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

249 ஆம் கிளை
நெறியாளர், கிளைக்குழு அங்கத்தவர்
கட்டைப்பிராய்.

[67339]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கவர்ச்சிக் கோஷங்கள்

இனப் பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் விரைந்து காணவேண்டும். அதற்காக நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறோம். எமது ஒத்துழைப்புத் தொடர்பாக ஏற்கனவே எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திவிட்டோம்.

இவ்வாறு கூறியுள்ளார் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர் ஒருவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். அந்த வைபவத்தில் பேசுகையில்தான் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் வழமைப் பிரகாரம் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்படும். அந்தக் கையோடு தேர்தல் ஒன்று நடைபெறும்; அனேகமாக ஜனாதிபதித் தேர்தலே நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

ஆகையால் இந்த மூன்று மாத இடைவெளிக்குள் தமிழர் தரப்பு வாக்குகளைக் கவர்ந்து கொள்வதற்காக ஆளுங்கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும போட்டா போட்டியுடன் அலுவலாற்றப் போவது நிச்சயம்

அந்தக் கவர்ச்சிக் காரியத்தின் ஆரம்பம் தான் ரணிலின் விரைந்து தீர்வு காண வேண்டும்; ஒத்துழைப்புத் தர நாம் தயார் என்ற கோஷங்கள்.

சரி, ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து ஆட்சியில் அமர்ந்திருந்த பதினேழு வருட காலத்தில் இனப்பிரச்சினைக்கு நியாயமான, நீதியான தீர்வுகாண முடியவில்லை என்பது தனி விவகாரம் என வைத்துக் கொள்வோம்.

இப்போதைய அரசாங்கம் தனது தீர்வுப் பொதியை வெளியிட்டு இன்னும் சில நாள்களில் நான்கு வருடங்கள் முடியப் போகின்றன. (1995 ஒகஸ்ட் மூன்றாம் திகதியன்று சந்திரிகா அரசு தனது தீர்வுப் பொதியைப் பகிரங்கப்படுத்தியது.)

அந்தத் தீர்வுப் பொதியை — அரசியல் தீர்வு யோசனையை — அதிகாரப் பரவல் திட்டத்தை — நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சமர்ப்பித்திருந்தும், பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சி, தீர்வு ஒன்றைக் காண்பதற்குச் செயலளவில் ஒத்துழைக்கவில்லை. இனப்பிரச்சினை விரைந்து தீர்க்கப்படவேண்டும் என அக்கட்சி உள்ளாந்தரமாக உணரவில்லை என்பதேயாகும்.

அவ்வாறிருக்க, இப்போது திடீரென சுடலைஞானம் வரப்பெற்றவன் போல, விரைந்த தீர்வு, ஒத்துழைக்கத் தயார் என்ற கோஷங்களை ஒலிப்பது உள்நோக்கத்துடன் அன்றி வேறு எதற்காக? தமிழர்களின் வாக்குகளை வாங்குவதற்கான கவர்ச்சி நாடகமன்றி வேறென்ன?

லிம் பொக்ஸ் முகதாவில் உடன்பாடு கண்டு சுமார் இரண்டு வருடங்களாகியும், ஒருவர் மீது மற்றவர் பரஸ்பரம் மாறிமாறிக் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்த சந்திரிகா தரப்பும் ரணில் தரப்பும் — ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் — வர்த்தகப் பிரமுகர்களின் அனுசரணையில் சந்தித்துப் பேச முன் வந்திருப்பதும் வாக்குக் கவர்ச்சி நாடகத்தின் ஒரு காட்சியே!

ஆகையால், புதிய கோஷங்கள் திடுதிடுப்பென திருப்பங்களையும் மாற்றங்களையும் கொண்டு வரும் என்று தமிழர்கள் ஏமாந்து விடக்கூடாது. இவ்வாறான எத்தனை அரசியல் மின்னற் காட்சிகள் தேய்ந்து போயின என்பதனையும் மறந்து விடலாகாது.

---

# பட்டாலிக் பிரதேசம் முழுவதையும் இந்திய இராணுவம் கைப்பற்றியது!

## 'ஸ்ரிங்கர்' ஏவுகணை உட்பட ஆயுதங்களைமீட்டதாக அறிவிப்பு

ஸ்ரீநகர், ஜூலை 11

காஷ்மீரில் ஊடுருவல்காரர்களுக்கு எதிராக நடைபெறும் சண்டையில் ஒருதிருப்பமாகப் பட்டாலிக் பிரதேசம் முழுவதையும் இந்தியப் படைகள் கைப்பற்றிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தரையில் இருந்து வானுக்கு ஏவும் 'ஸ்ரிங்கர்' விமான எதிர்ப்பு ஏவுகணை உட்பட பெருந் தொகையான ஆயுதங்களை ஊடுருவல்காரர்களிடம் இருந்து தாங்கள் கைப்பற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த இரண்டு நாள்களாக பட்டாலிக் பிரிவில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையில் 4 ஆயிரத்து 100 என்ற சிகரம் மந்து தாலோ என்னும் இடத்தில் உள்ள ஊடுருவல்காரரின் நிர்வாக முகாம் மற்றும் தாரு மலைப் பகுதி 4 ஆயிரத்து 281 சிகரம் எனும் முக்கிய நிலைகளை இந்திய இராணுவம் கைப்பற்றியுள்ளது எனவும் —

பட்டாலிக் பிரிவில் பாகிஸ்தானிய இராணுவ வீரர்களின் உடல்கள் நிரம்பிய 30 குழிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவை தவிர பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் மற்றும் இராணுவத்தினரின் 60 உடல்களையும் இந்தியப் படையினர் மீட்டெடுத்துள்ளனர் என்றும்— இராணுவப் பேச்சாளர் கூறினார். (ஐ-க)

## இஸ்ரேலிய பிரதமர் விருப்பம்

ஜெருசலேம், ஜூலை 11

இஸ்ரேல்- பலஸ்தீன இறுதி அமைதி ஒப்பந்தத்துடன் 'வைநதி' அமைதி ஒப்பந்தத்தின் செயற்பாட்டையும் சேர்க்க விரும்புவதாக இஸ்ரேலின் புதிய பிரதமர் எருட் பராக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்று பலஸ்தீன அதிபர் யாஷீர் அரபாத்துடன் பேச்சு நடத்தப் போவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த யோசனையை பலஸ்தீன அதிகாரிகள் ஏற்க மறுத்துள்ளனர்.

[ஐ-க]

### வடக்கு ஈராக்கில்

## குர்டிஷ் முகாம்கள் மீது துருக்கி தாக்குதல்

பாக்தாத், ஜூலை 11

ஈராக்கின் வடபகுதியில் உள்ள குர்டிஷ் முகாம்களின் மீது கடந்த திங்கட்கிழமை துருக்கி தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

பீரங்கித் தாக்குதல் நடத்தும் ஹெலிகொப்ரர் உதவியுடன் சுமார் 10 ஆயிரம் துருக்கிப் படையினர் இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர் என ஈராக் செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது.

துருக்கியின் இந்தச் செயல் ஈராக்கின் தன்னாட்சி உரிமையை மீறும் செயலாகும்.

அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக் மீது தொடுக்கும் கடும் இராணுவ நடவடிக்கையோடு இணைந்த அப்பட்டமான— சட்ட விரோதமான— அத்துமீறல் நடவடிக்கை இது என ஈராக் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குர்டிஷ் தலைவர் அப்துல்லா ஒகலனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னும் குர்டிஷ் பிரிவினர் மீது துருக்கியர் தாக்குதல் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. [ஐ-க]

## தீவிரவாதிகளுடன் ஷெரீப் சந்திப்பு

இஸ்லாமாபாத், ஜூலை 11

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் காஷ்மீர் தீவிரவாதிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கார்கில் பிரச்சினைக்கு தீர்வுகாண உதவுமாறு ஊடுருவல்காரர்களுக்கு வேண்டுகோள் விடுப்பது என்று நேற்றுமுன்தினம் பிரதமரும் இராணுவத் தளபதிகளும் கூடி முடிவு எடுத்த உடனேயே பிரதமரின் இல்லத்தில் தீவிரவாதிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்பின் போது சிம்லா உடன்படிக்கையின்படி எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மதிப்பதில் அரசுக்கு உதவுமாறு தீவிரவாதிகளிடம் ஷெரீப் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதாகவும் —

கார்கில் பகுதியில் இருந்து பின் வாங்க ஊடுருவல் காரர்கள் மறுத்து விட்டதாகவும் —

இப்பகுதியில்போர்அபாயத்தைக் குறைப்பதாக பாகிஸ்தான் பிரதமர் உலக நாடுகளுக்குத் தெரிவித்திருந்தார். இந்தியாவில் தமது கைவசம் உள்ள முக்கியமான சில சிகரங்களை விட்டு வெளியேற ஊடுருவல்காரர்கள் ஒப்புக் கொண்டதாகப் பாகிஸ்தான் நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-க)

---

# மற்றவர் மனதின் சிந்தனையை செபத்தின் வலிமையால் அறியலாம்.

## புனித ஆசீர்வாதப்பரிடம் அந்த அருள்சக்தி இருந்தது

கிறிஸ்தவம் உரோமப் பேரரசில் பரவியபோது, கடவுளாக வழிபடும் முறையைக் கிறிஸ்தவர்கள் ஏற்காததால் அவர்கள் அளவில்லாத் துன்பங்களை அனுபவித்தனர். 313 இல் பேரரசன் கொன்ஸ்ரன்ரைன் கிறிஸ்தவனாக மனம்மாறி கிறிஸ்தவத்துக்குச் சுதந்திரம் கொடுத்தது மட்டுமல்ல, அது அரச மதமாக மதிக்கப்பட்டு எல்லா விதமான சலுகைகளையும் பெறவும் வழி செய்தான். அதற்குப் பின்னைய நூற்றாண்டுகளில் சமூகச் சீர்கேடுகளின் காரணமாக கிறிஸ்தவ மதிப்பீடுகளைச் சமுதாயத்தில் வாழமுடியாதென்று கருதிய பலர் பட்டினங்களை விட்டு வெளியேறி வனாந்தரங்களிலும் தனிமையான இடங்களிலும் தவ வாழ்வினூடாக இறைவனைக் காண முற்பட்டனர்.

இவ்விதமாக ஒவ்வொருவரும் வாழ முற்பட்ட காலததிலேயே ஆசீர்வாதப்பரும் ஆதீன துறவற வாழ்க்கை முறையைத் தனதாக்கியது மட்டுமன்றி அதைச் சீர்செய்யவும் முற்பட்டார். இத்தாலியின் நோர்சியாவில் 480இல் பிரபுத்துவ குடும்பத்தில் இவர் பிறந்தார். உரோமையில் படிக்க அனுப்பப்பட்ட இவர், சமூகச் சீர்கேடுகளைக் கண்டு இவ்வுலக வாழ்வை விட்டுவிலகத் தீர்மானித்தார்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

மூன்று ஆண்டுகள் சுபியாக்கோ மலைப் பகுதியில் வாழ்ந்த இவர் ஏறத்தாழ 528 இல் மொண்டே கஸீனோவுக்குச் சென்று இவ்விதமான சூழலை ஏற்படுத்தி 547 இல் இறக்கும்வரை அங்கேயே வாழ்ந்தார். இக்காலத்திலேயே ஆதீன துறவற வாழ்க்கைக்கான ஒழுங்கு நூலை அவர் எழுதினார்.

ஒவ்வொரு துறவற இல்லமும் ஒரு குடும்ப உணர்வோடும், உறவோடும் வாழ்வதற்கு ஏதுவாகப் பின்வரும் மூன்றையும் முக்கியமான அம்சங்களாக அவர் தந்துள்ளார்.

1) வழிபாடும் செபமும்: நாளாந்தம் குறிக்கப்பட்ட நேரங்களில் துறவிகள் ஒன்றாகச் சேர்ந்து செபிப்பது.

2) வேலை: துறவற வாழ்வோடு இணைந்த நாளாந்த வேலைகள். தமது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும், சோம்பலுக்கு இடமளிக்காமலிருக்கவும்,

**புனித ஆசீர்வாதப்பரின் திருநாள் இன்றாகும்**

உடற்பயிற்சிக்காகவும் வேலை அவசியம். துறவியர் திருச்சபையில் நேரடியாகப் பணிசெய்ய வேண்டும் என்ற நோக்கு அக்காலத்தில் இருக்கவில்லை.

3) திருவிவிலியம்: இறை வார்த்தையை வாசிந்து தியானித்து, செபிக்கவும். இறை உறவில் வளரவும் இது அத்தியாவசியமானது,

நற்செய்தியின் மதிப்பீடுகளின்படி வாழ்ந்து நிறைவை எய்தவும் தனி நபரின் மீட்பை நோக்கிய பயணமாகவும் இவ்வாதீன துறவற வாழ்வு வழி சமைப்பதாக பெனடிக்ற் நம்பினார். இதற்குக் குழுவாக வழிபட்டு குழுவில் அன்புறவை வாழ்வதும் இன்றியமையாதது. எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடிய துறவற இல்லத்திலேயே இறையன்பை முழுமையாக வாழலாம் என்பது அவரது நம்பிக்கை.

### ஒழுங்குமுறை அவசியம்

ஒவ்வொரு துறவற இல்லமும் எழுதப்பட்ட ஒழுங்கு (சட்டம்) முறையினாலேயே நிர்வகிக்கப்பட்டது. ஒவ்வொரு துறவியும் தான் விரும்பியபடி வாழ்வதை அவர் ஆதரிக்கவில்லை. குழுவுக்குத் தந்தையைப்போலிருந்து வழிநடத்தும் மடாதிபதியும்கூட ஒழுங்குமுறைக்கு உட்பட்டவராகவே கருதப்பட்டார். குழுவிலுள்ளோர் அனைவரும் ஒரே நேரத்தில், ஒரே அலுவலில் ஈடுபட வேண்டும் (செபம், வேலை, தியானம்) எனப் பணித்தார்.

மடத்துக்கு மடம் ஒருவர் மாறாது, மரணமட்டும் ஒரே மடத்திலேயே வாழ்வதை அவர் வலியுறுத்தினார். குடும்ப உணர்வோடு, கிறிஸ்துவிற்கே கீழ்ப்படிவது போல, மடாதிபதிக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து வாழ்வதே நிலையான சமூக அமைப்பை இல்லத்துக்குக் கொடுத்தது.

540-604 ஆம் காலப் பகுதியில் வாழ்ந்த புனித பெரிய கிரகோரியார் ஆசீர்வாதப்பருடன் வாழ்ந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் எழுதிய அவரின் வாழ்க்கை வரலாற்றில், ஆசீர்வாதப்பரினால் செய்யப்பட்ட புதுமைகள் பலவற்றை எடுத்துக் கூறியுள்ளார். அவரின் செபத்தின் வல்லமையினாலேயே இவை செய்யப்பட்டன என்பது தெளிவாகவுள்ளது இறைவனில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்த ஆசீர்வாதப்பர் வேறெங்கேயோ

### அன்ரன் மத்தாயஸ்

நடைபெறும் நிகழ்வுகளை அறியும் ஆற்றல் உள்ளவராக இருந்தது மட்டுமல்ல, மற்றவர்களின் மனதில் பொதிந்திருந்த சிந்தனைகளையும் அறிய வல்லவராயிருந்தார்.

எவ்விதம், கலாபனைகளின் காலத்தில் வேத சாட்சியாக மரிப்பதே கிறிஸ்தவ வாழ்வின் அதி உன்னத குறிக்கோளாக இருந்ததோ, அதே போல 6-7 ஆம் நூற்றாண்டுக்குப்பின் ஆதீன துறவற வாழ்வே அவ்விதமான முக்கியத்துவத்தைத் திருச்சபையில் பெற்றது. துறவிகளின் தந்தை என்று அழைக்கப்படுகின்ற புனித ஆசீர்வாதப்பரின் பணியினால் திருச்சபை வளம்பெற்றது. இன்றுகூடப் பல்வேறு தேவைகளில், சிறப்பாகத் தீமையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட, கிறிஸ்தவர்கள் அவரின் "ஆற்றல் மிக்க பரிந்துரையை நம்பிக்கையோடு நாடி ஆன்மீக நன்மைகளையும் அடைவது கண்கூடு.

★

---

**நாளை**

ஆனி 28

திங்கட்கிழமை

திதி: சதுர்த்தசி

பிற்பகல் 11.11 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

முன் இரவு:10.30 வரை

அமாவாசை விரதம்.

சுபநேரம்: 11.59—1.29

ராகுகாலம்: 7.29—8.59

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

**உதயவாக்கு**

பிறருடைய குற்றச்சாட்டுக்கு ஒரு போதும் செவி சாய்க்காதே.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவார, திருவாசக சிந்தனைகளுடன் வேதாகமக் கருத்துகளும் பொதிந்தது

எமது மொழியும் மதமும் காலத்துக்குக் காலம் பல பாசுரங்களைப் பெற்று சிறப்புற்று விளங்குகின்றது. அவ்வகையில், அண்மையில் வெளியிடப்பட்ட ''சிவனருள் அமுதம்'' என்ற நூல் சிவப்பரம் பொருளின் பெருமைகளை மிகுந்த பக்தியுணர்வோடு அமைந்த பாடல்களைக் கொண்டமைந்துள்ளது. இந்நூலைப் படிப்போர் பக்தி வெள்ளத்தில் மூழ்குவர். இந்நூல் 22 பக்கங்களில் 102 பாடல்களைக் கொண்டவையாகக் காணப்படுகிறது.

இந்நூலிலுள்ள பாடல்கள் உயரிய சந்தச்சிறப்புக் கொண்டவையாக அமைந்துள்ளது.

## நூல் வரிசை

பக்தியில் அடிநாதத்தோடு சரியை, கிரியை, யோகம், ஞானம், தத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன.

அருணகிரிநாதப் பெருமானுடைய பாடல்களில் எவ்விதம் பக்தியுணர்வோடு சந்தம் பொருந்திய பாடல்கள் அமைந்துள்ளதோ அவ்விதமே இந் நூலிலும் அவ்வகை உணர்வைப் படிக்கும் பொழுது பெறக்கூடியதாக உள்ளது. இப் பாடலில் ஓசை நயம், பொருள் நயம், பக்தியுணர்வு ஆகியவை ஒருங்கமைந்துள்ளமை நூலைப் புகுந்து படிக்கும்போது புலப்படக்கூடியதாக உள்ளது. இதேபோன்றுஇதில் அமைந்த பாடல்கள் அனைத்தும் பக்தியின்பம் அளிப்பவையாகவே அமைந்துள்ளன.

இந்நூலாசிரியர் சி. சக்திகிரீவன் அவர்கள் இந்துக்களின் தலைமை அமைப்பான இந்துசமயப் பேரவையின் கௌரவ செயலாளராக

**நூல்: சிவனருளமுதம்**
**ஆசிரியர்: சி. சக்திகிரீவன்**

இருந்து அரும்பணி செய்பவர். இவர் பேராசிரியரான சண்முகதாஸ் குறிப்பிட்டது போல பேருக்காகவும், புகழுக்காகவும் இப்பாடல்களை எழுதவில்லை என்பது புலப்படுகின்றது. உண்மைப் பக்தி உணர்வு இவரது பாடல்களில் மேலிட்டுக் காணப்படுவது கண்கூடு. நெஞ்சார இறைவன் மக்கள்மீது கொண்டுள்ள கருணையையும், இதனைச் சைவசமயத்தின் ஊடாக முன்னெடுக்க வேண்டும் என்பதையும் இப்பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனை உணரும் பொழுது உண்மையான சிவ பக்தியை உலகில் நிலைபெறச் செய்ய முடியும்.

### பசியில்லாத பெருமான்

இறைவன் என்றுமே பசியில்லாதபெருமைக்குரியவன். அவன் அருளமுதத்தோடு என்றும் உள்ளவன். அத்தகைய இறைவன் எதற்காக பசியென்று கேட்கவேண்டும்? எல்லா உயிர்களிலும் கலந்து நிறைந்துள்ள சிவபெருமான் அவர்களின் பசிப்பிணியை நீக்கும் பொருட்டு பிச்சா பாத்திரத்தை ஏந்துகின்றான் என்ற பெருமையை இந்நூலாசிரியர் பசியென்று மில்லான், பசியென்று கேட்பானென புராண இதிகாச பாரம்பரிய கருத்துக்களோடு அமைத்துப் பாடியுள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

நூலாசிரியர் சிவபிரான் மீது கொண்ட பக்தியின் வெளிப்பாடாக பிறந்த ஞான உணர்வோடமைந்த இப்பாடல்கள் சிவபிரான் தன்னை நம்பும் அடியார்க்கு உதவும் பெருங் கருணையுள்ளவன் என்பதை பல பாடல்களினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

**திருமதி கலைவாணி இராமநாதன்**

இன்று நம்மத்தியில் இந்து, சைவம் என்ற வேறுபாட்டை முன்வைப்பது பக்தி எழுச்சிக்கு ஏற்புடையதல்ல என்பது நூலாசிரியரின் கருத்து.

''அவமே பழிசொல்லி
அறுசமயம் உனக்கில்லை
என்னும் வீணர்
தவமே புரிந்து தகஜெபம்
புரிபவருள் தருவையானால்
சிவமே அனைத்து மெனத்
தெளிந்து மனம்மாறாமல்
சிறுமை போக்கி
பவமே தொடராமல் பசி
பயிலா வாழ்வளிக்கும்
பரமசோதி''

என்கின்றது 77 ஆவது பாடல்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் முகம்



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்சங்கீதபூஷணம் எல். திலகநாயகம் போல் நாடறிந்த சங்கீதக் கலைஞன். இன்று யாழ்ப்பாணக் கல்விவலயத்தின் உதவிக்கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றும் அவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலும் ''சுப்பகிறோ'' பாடகராக இருந்துவருகிறார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைக்கச்சேரி, பாட்மலை நிகழ்ச்சிகளில் நிறையவே நிறைவாகச் செய்துள்ளார். இந்து சமய, கிறிஸ்தவ சமயப் பாடல்களை இசை அமைத்துப்பாடியுள்ளார். மெல்லிசைப் பாடல்கள் 40 வரையில் ஒலிப்பதிவாகியுள்ளன. வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரப் பரீட்சைக்குப் பிரதம பரிசோதகராக நீண்டகாலம் கடமையாற்றிவருகிறார். இலங்கையின் பல பாகங்களிலும் 300– க்கு மேற்பட்ட மேடைக்கச்சேரிகளைச் செய்துள்ளார். நல்லை ஆதீனத்தால் 20 ஆவது பீடாரோகண விழாவின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். கர்நாடக இசை இரசிகர் மன்றத்தினால் ''ஸ்வராக லயவிநோதசுரபி'' என்ற பட்டமும். இந்து சமயக் கலாசார அமைச்சினால் ''கலைச் செம்மல்'' என்ற பட்டமும் வழங்கப்பட்டுள்ளது. இவரது இசைக்கச்சேரிகள் பல பத்திரிகைகளிலும் உன்னதமாக விமர்சிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டுள்ளன, ''மல்லிகை'' இவரது படத்தை அட்டைப்படமாகப் போட்டுக் கௌரவித்தது. கலாபூஷணம் எல். திலகநாயகம் போல் தனக்கென ஓர் இசைப் பாரம்பரிய இளங்கலைஞர்களை உருவாக்கியுள்ளார். 'ராகவேந்திரா மிருந்திகா' என்னும் அமைப்பை உருவாக்கி மாதாந்த இசைக் கச்சேரிகளை நடத்தி வருகிறார். வேதாளம் சொன்னகதை, சம்பூரண இராமாயணம் ஆகிய நாடகங்களுக்கு இசையமைத்துள்ளார். உலக ஆசிரியத்தினத்தில் சிறந்த நல்லாசிரியனாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்குரியவர். கடந்த காலங்களில் ரூபவாஹினியில் நான்குமுறை கலையரங்கத்தில் பாடிப்பாராட்டுப் பெற்றுள்ளார். கர்நாடக சங்கீதம் என்ற நூலின் ஆசிரியராக உள்ளார். ஜோன் டி சில்வா மண்டபத்தில் நிகழ்ந்த விழாவில், இசை சம்பந்தப்பட்ட விரிவுரையும்,இசைக்கச்சேரியும் நிகழ்த்தி, கலாசார அமைச்சரால் பாராட்டப்பட்டுள்ளார். சென்ற ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மூன்று ஆண்டுத்திட்டத்தில் ஆண்டு 9 க்குச் சங்கீத பாடத்தை மேம்படுத்தும் திட்டத்தைப் பதினைந்து பாடசாலைகளில் செயற்படுத்தி வருகிறார். ஒருமணி நேரத்திற்கான கிறிஸ்தவப் பாடல்களை யாத்து இசையமைத்து ஒலிப்பதிவு நாடா ஒன்றினை வெளியிட்டுள்ளார். இசைத்துறையின் முக்கிய கலைஞரான சங்கீதபூஷணம் எல். திலகநாயகம்போல் அவர்களைக் கலாபூஷணம் விருது வந்தடைந்து கௌரவம் பெறுகிறது.

— செம்பியன்

★ ★ ★ ★ ★

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை கோண்டாவில் டிப்போவில் திடீர் பரிசோதனைக் குழுப் பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய கே. வி. இராசதுரை தனது 36 வருட சேவையிலிருந்து இம்மாதம் 15 ஆம் திகதி முதல் ஓய்வுபெறவுள்ளார்.

இவர் குருணாகல் டிப்போவில் 21 வருட காலமும், யாழ். டிப்போவில் 15 வருட காலமும் சிறப்பாகக் கடமையாற்றி அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற்றவர்.

(ஐ-117)

★ ★ ★ ★ ★

சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலய அதிபர் ம. சபாரத்தினம் கடந்த முதலாம் திகதி முதல் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

(ஐ-117)

★ ★ ★ ★ ★

தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலயத்தினால் நடத்தப்பட்ட இந்துசமய அறிவுப் பேச்சுப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுதாமதி சந்தோஷம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் 1993 ஆம் ஆண்டு யாழ். சைவ பரிபாலன சபையால் நடத்தப்பட்ட ஆறுமுக நாவலர் பேச்சுப்போட்டியிலும் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் தற்போது கொழும்பு பல்கலைக்கழக சட்டப்பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-6)

★ ★ ★ ★ ★

நீர்வேலியைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபரும். பிரபல சமூகசேவையாளருமாகிய தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் வடமாகாண மேல் நீதிமன்றத்தின் நீதியரசரான சுந்தரம் சிறீஸ்கந்தராசா அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இவர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற வலயத்தில் தமிழ்மொழியில் நொத்தாரிசாக கடமையாற்ற பொது நிர்வாகம், மாகாண சபை, உள் நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய், நீர்வேலி, புத்தூர் பகுதியில் நிலவிவந்த நொத்தாரிஸ் குறையை இவரது நியமனம் பூர்த்திசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது,

(ஐ–110)

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தில் கடமை புரியும் பொது எழுதுநர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த ஆர். தவராஜா விசேட பதவி நிலை உத்தியோகத்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐந்து வலயங்களிலுள்ள அலுவலர்கள், ஆசிரியர்களின் கோவைகளை ஒழுங்குபடுத்துதல், இதுவரை முடிவுறுத்தப்படாமலுள்ள ஆசிரியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் ஆசிரியர்களை மாகாண சேவைக்கு உள்ளீர்ப்பது தொடர்பான வேலைகளில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உதவும் பணிகளை மேற்கொள்வார்.

இது தொடர்பான வேலைகளுக்கு இவருக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட உள்ளதாக செயலாளர் குறிப்பிட்டுள்ளார். [ஐ.51]

## சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பிதழ்

# ஆசிரியராகவே பிறந்தவர் என்று கருதத்தக்க தகுதிகள் உடையவர்

மட்டுவில் மருதநிலம் பெற்ற மகள், கோண்டாவில் வளர்த்தெடுத்தது. பெற்றோரின் ஏகபுத்திரி இவர். கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் தமிழ்மொழி மூலம் சிரேஷ்ட தராதரப் பத்திரத்தினைப் 16 வயதில் பெற்றதும், ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை எழுதும் வயதினை அடையாதிருந்தமையால் ஆங்கில மொழி மூலக்கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் பெறும் வாய்ப்பினைப் பெற்றார். சிரேஷ்ட இடைநிலைக் கல்வியை முடித்துக்கொண்டு திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையில் பெற்றோரின் விருப்பப்படி ஆசிரியர் கல்வியைப் பெற்றவர். ''கல்வித் துறையில் நிர்வாகத்தினை அதிபர் சுவாமிநாதனிடமும்,

## நீத்தார் நயப்புரை

உளவியல் கற்கை நெறியினை ஞானவிளக்கு உபஅதிபர் கைலாசபதியிடமும், இலக்கிய இரசனை, கற்பித்தல் செயற்பாடுகளை இலக்கிய கலாநிதி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களிடமும் கற்றுத்தேற முடிந்தது எனது தவப்பயனே'' என்று கூறிப் பெருமைப்படுவார்.

கல்வியில், கலையில், விளையாட்டில் இயல்பாகப் பெற்ற திறன்களை மாணவர்களுக்குப் புகட்டும் இவரது ஆற்றல் அதிபர்களாலும் பாடசாலைச் சமூகத்தாலும் இன்றும் பேசப்படுகின்றது. மற்



றும் தையல், விளையாட்டுப் பயிற்சி வழங்குவதிலும் சமர்த்தர். தான் 11 ஆண்டுகள் படித்த கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் இளைப்பாறும் வரை இடமாற்றம் ஏதுமின்றிப் பணிபுரிந்த நாற்பது ஆண்டுகளையும் சந்தித்த அதிபர்களையும் நினைவுபடுத்தி இரைமீட்பதில் அகம் காண்பவர் இவர். தமிழ், கணிதம், சுகாதாரம் ஆகிய பாடங்களை பாலர் வகுப்பு முதல் ஜி. சீ. ஈ சாதாரண வகுப்பு வரை, இலாவகமாகக் கற்பிக்கும் அன்னம்மா உபாத்தியாயர், மாணவர் மீது கரிசனையும் கண்டிப்பும் மிக்கவர்.

மாணவர் நெஞ்சத்தில் குடிகொண்ட ஆசிரியர்களே ஆசிரியர்களாகப் பிறந்தவர்கள், ஆசிரியர் கருத்தரங்குகள் பலவற்றில் சிலரைச் சந்தித்ததுண்டு. இவரைச் சுற்றி ஒரு ஆசிரியர் வட்டம் உருவாகிவிடும். காரணம் இவரது நகைச் சுவைத் துணுக்குகள். கூட்டங்களில் பிரச்சினைகள் தோன்றும்போது மிக அமைதியாக இருப்பார். சலசலப்புகளுக்கு மத்தியில் தீர்க்கமான குறிப்பொன்று ஒரு மூலையில் இருந்து வரும்; அவ்விடம் நோக்குகையில் அன்னம்மா உபாத்தியாயர் அமைதியாக இருக்கக் காணலாம்.

**சு. லோகதாசன்**
**(இளைப்பாறிய அதிபர்.)**

இத்தகைய நல்லாசிரியர் பல்துறை ஈடுபாடு க.வை. தனேஸ்வரனை விரும்பிக் கரம்பிடித்து இரு ஆண் பிள்ளைகளையும் இரு பெண் பிள்ளைகளையும் பெற்று மகிழ்ந்தவர்.

உலகெங்கும் இன்று பரந்து வாழும் இவரது மாணவர்களும் அனுதாபிகளும் புலம்பியழ வாழ்வை முடித்துக்கொண்ட அம்மையார் ஆசிரியராகப் பிறந்தவர் என்பதில் ஐயம் இல்லை. ★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதியாக வாழலாம் என நினைத்து வந்த 10ஆவது நாளன்றே தொலைந்துபோன கணவன்!

## எலும்பாகக் காண்பேன் என்று வாழ்நாளில் எண்ணியும் பார்க்கவில்லை என்கிறார் மனைவி

காணாமற்போன எனது கணவர் வருவார் வருவார் என்ற நம்பிக்கையில் எனது மூன்று குழந்தைகளையும் பட்டினியின்றி வளர்த்து வந்தேன். அவர் இறந்துவிட்டார் என்ற செய்தியால் வாழ்வதா சாவதா என்று போராடிக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு தனது சோகக் கதையைத் தொடங்கினார் செம்மணிப் பகுதியில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் ஒன்றுக்கு உரியவரான இராசையாசதீஸ்குமாரின் மனைவி திருமதி சதீஸ்குமார்சாந்தினி.



இனிமையான நாள்களில் தனது மூத்த புதல்வன் சர்மிலனை ஏந்தியவாறு மனைவி சாந்தினியுடன் சதீஸ்குமார் எடுத்துக் கொண்ட படம் இது.

யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகப் பெரும் பரபரப்பையும் கவனத்தையும் ஈர்த்த செம்மணி புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் ஒன்று தமது கணவனுடையது என்பதனை சாந்தினி யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டினார்.

கடந்த மூன்று வருடங்களாக தமது கணவர் உயிருடனிருக்கிறார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்த அவர்இன்று இனிமேல் கணவர் திரும்பி வரமாட்டார் என்பதனை உறுதிசெய்து கொண்டார்.

30 வயதில் பூவையும் பொட்டையும் இழந்த நிலையில் இந்த இளம் கைம்பெண் தனது மூன்று குழந்தைகளை வளர்த்தெடுக்க வேண்டிய பெரும் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இவரையும் குழந்தைகளையும்சந்திப்பதற்காக மீசாலையிலுள்ள அவரது வீட்டிற்கு சென்றோம். எங்களை அறி முகப் [illegible] பொழுது சதீஸ்குமாரின் இரண்டாவது புதல்வரான நான்கு வயது நிரம்பிய சிறுவன் எம்முன்னே வந்தான். சரியாக தகப்பனின் சாயலில் பிறந்துள்ளான் என்று அந்தக் குழந்தையை அங்கிருந்த அயல்வீட்டுப் பெண் ஒருவர் எமக்கு அறிமுகப்படுத்தினார்.

அந்தக் குழந்தையை அருகில் அழைத்து, ''அப்பா எங்கே?'' என்று கேட்ட பொழுது, பதிலளிக்க முடியாதிருந்த அந்தக் குழந்தையின் பார்வை அப்பா என்றால் யார் என்று கேட்பது போல இருந்தது.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த சதீஸின் மனைவி சாந்தினி, ''அப்பாவையே குழந்தைகள் மறந்து போய் விட்டார்கள். அவர் இறந்த செய்தி கூட அவர்களுக்கு சரியாக விளங்கவில்லை. அவரது போட்டோவைக் காட்டி இதுதான் அப்பா என்று காட்டுவோம்'' — என்று கண்ணீர் வழிந்தோடச் சொன்னார்.

அவர் காணாமல் போன போது மூத்தவனுக்கு 5வயது. அவனுக்கு அப்பாவின் நினைவு வரும்பொழுதெல்லாம், ''அப்பா எங்கே''? என்று கேட்பான். நான் என்ன சொல்வது என்று தெரியாமல் மனதிற்குள் அழுவேன் — என்றார்.

மூன்று ஆண் குழந்தைகளைக் கொண்ட இந்தக் குடும்பத்தில் பூபாள ராகம் இசைக்க வேண்டிய பொழுதில் முகாரி ராகம் ஒலிப்பதை நேரில் பார்த்த பொழுது எம் கண்களும் கலங்கத் தொடங்கியதை எம்மால் தடுக்க முடியவில்லை.

எனது கணவர்இறந்து விட்டார் என்பதை அன்று பொலீஸ் நிலையத்தில் உறுதிப்படுத்திக் கொண்ட கணமே, உலகம் முழுதாக இருண்டு விட்டதாக உணர்ந்தேன், அதிர்ச்சியடைந்தேன். அவரை எலும்புக்கூடாக நான் காண்பேன் என்று எண்ணியும் பார்த்ததில்லையே! மரணம் எல்லோருக்கும் நடப்பது இயற்கை தான். ஆனால் எனது கணவர் எவ்வளவுசித்திரவதைப்பட்டு மரணமானார்என்பதைநினைக்க நினைக்க என்னால் தாங்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது — என்றார் கண்ணீர் சிந்தியவாறே.

இடையிடையே விக்கிவிக்கி அழுத வண்ணம், கண்ணீர் ஆறாக ஓட, தமது சோகக் கதையின் ஒரு துளியை எமக்கு அவர் சொன்னார்:

எனது நிலை இனிமேல் எந்தப் பெண்ணுக்கும் ஏற்படக் கூடாது. குழந்தைகளுக்கு இந்தச் சம்பவம் பற்றி தற்பொழுது புரியாது. அவர்கள் வளர வளர இதைப்பற்றி அறிவார்கள் தானே.

அவர் எம்முடன் இருக்கும் பொழுதே அன்றாடம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்

(9 ஆம் பக்கம் பார்க்க)

**சூரியகாந்தி**

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

**கேசரி**

# சிட்னியில் தமிழ்த் தகவல் அமர்வு

அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகரில் மே மாதம் கடைசி வாரத்தில் தமிழ்த் தகவல் அமர்வுதினம் சிறப்பாக நடைபெற்றது. இந்த அமர்வில் பல்வேறு நிறுவனங்களையும் திணைக்களங்களையும் சேர்ந்த தமிழ் அலுவல்களுடன் தொடர்புடைய தமிழர்கள் அல்லாத இனத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானோரும் கலந்து கொண்டனர்.

நடனாலயம் என்ற அமைப்பினால் இரண்டாம் கட்டமாக நடத்தப்பட்ட இந்த அமர்வுக்கு டாக்டர் ஏ.பாலா தலைமை வகித்தார்.

தமிழ் மொழியின் சிறப்பையும் தமிழ் இலக்கியத்தின் வளத்தையும் தமிழ்ப் பண்பாட்டின் மேம்பாட்டையும் அவுஸ்திரேலியாவிலுள்ள ஏனைய இனத்தவர்களும் அறிந்து கொள்வதற்கு உதவும் நோக்குடனே இந்த அமர்வு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சமஷ்டி லொவ்தொகுதிநாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மேர்வி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையை நிகழ்த்தினார்.

அவர் அங்கு உரையாற்றும் போது—

ஈழத்தமிழர்களுடைய பிரச்சினை குறித்து அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் எடுத்துரைக்கப்போவதாகவும்இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் தமிழ்மொழி ஒரு பாடமாக நடைமுறைக்கு வரும் என்றும்—கூறினார்.

தமிழ்மொழியை மேற்குறிப்பிட்ட மாநிலத்தில் ஒரு பாடமாக்குவதற்கு நியூசவுக் வேல்ஸ் மாநில அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை நியூசவுத் வேல்ஸ் மூத்த குடியினர் சங்கத் தலைவர் கேணல் வி. இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினர் கோன் மேர்வியிடம் கையளித்தார்.

ஸ்ராத்பீல்ட் (Strathfield) மாநகரசபை முதல்வர் லாரஸ்ரூல், நியூசவுத்வேல்ஸ் இன சமுதாயங்கள் சபையின் தலைவர் போல் நிக்கொலான், சிட்னி பல்கலைக் கழக வரலாற்றுத்துறை கௌரவ ஆய்வுப் பேராசிரியர் டாக்டர் ஜெப்பிறி ஒடை ஆகியோரும் இந்த அமர்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

தொகுப்பு: என்.கே.ரி.

### ஆய்வுக் கட்டுரைகள்

தமிழ்மொழி வளர்ச்சிக்கு சைவம், வைணவம், கிறிஸ்தவம், இஸ்லாம் சமயங்கள் ஆற்றிய பங்களிப்புப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இந்த அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டன.

தமிழ்மொழிக்கு சைவசமயம் ஆற்றிய பங்களிப்பு என்ற ஆய்வுக்கட்டுரையை பொறியியலாளர் மு. தயாநிதியும், வைணவ சமயம் ஆற்றிய பங்களிப்பு என்ற ஆய்வுக் கட்டுரையை வேம்படி பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி சாவித்திரி பாலாவும், கிறிஸ்தவர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றிய பங்களிப்பு என்ற கட்டுரையை சிட்னி தமிழ் ஆராய்ச்சி நிலைய ஆலோசகர் டாக்டர் வி. ஈ. பாக்கிய நாதனும், இஸ்லாமியர்கள் தமிழ் மொழிக்குஆற்றிய பங்களிப்பு என்ற கட்டுரையை க. வள்ளலும் சமர்ப்பித்தனர்.

கலாநிதி ஆ. கந்தையா ஆங்கிலத்தில் எழுதிய ''முருகன் தமிழர்களின் கடவுள்'' என்ற நூலும் விழாவில் வெளியிடப்பட்டது.

இந்த அமர்வு தினத்தில் சிட்னி தமிழ் அறிவக நூலகம், தமிழர் நடுவ நூலகம், சைவமன்ற நூலகம், நியூசவுத் வேல்ஸ் மாநில நூலகம், ஸ்ராத்பீல்ட் பொது நூலகம் போன்றவற்றுக்கு ஆயிரம் தமிழ் நூல்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

காந்தளகம் உரிமையாளர் மறவன்புலவு காலஞ் சென்ற மு. கணபதிப்பிள்ளையின் நினைவாக அவரது மகன் க. சச்சி ானந்தனினால் 600 தமிழ் நூல்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

தமிழகத்தைச் சேர்ந்த தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஔவை நடராசன், டாக்டர் நம்பி காலஞ்சென்ற தமது தந்தையார் பேராசிரியர் மு. வரதராசனார் எழுதிய நூல்களையும் டாக்டர்சேரன் காலஞ்சென்ற தமது தந்தையார் தஞ்சாவூர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம் எழுதிய நூல்களையும் நன்கொடையாக வழங்கினர்.

பேராசிரியர் ஆர். சீனிவாசன், பேராசிரியர் இன்னாசி, பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் ஆகியோரும் தாம் எழுதிய நூல்களை நன்கொடையாக வழங்கினர்.

★

## எதிரொலி...

- இடியன் -

○ வடக்கு—கிழக்கு மாகாணங்களிலிருந்து பலவித வரிகள் மூலம் அறவிடப்படும் கோடிக்கணக்கான பணம், மக்களுக்குரிய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாமலேயே, மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றது; தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் இதைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

★ **தட்டிக்கேட்க முற்பட்டால், தாமே தட்டுப்பட்டுவிடுவோம் என்ற பயந்தான் காரணமோ?**

○ பாரதீய ஜனதாவைப்போல் இல்லாமல், நாட்டின் எல்லையைக் காப்பதில் காங்கிரஸ் உறுதியுடன் செயற்படும் என்கின்றார் சோனியா காந்தி.

★ **அதாவது, நாட்டின் எல்லையில், தனக்கு எல்லையில்லாத அக்கறை இருக்கின்றது என்கின்றார்!**

○ திசை காட்டும் கைக்கடிகாரங்களை வைத்திருந்ததற்காக மாணவர் இருவர் மட்டக்களப்பிலே கைது செய்யப்பட்டதாக வெரித்தாஸ் கூறுகின்றது.

★ **அவை காட்டுந் திசை, காட்டுத் திசையாக இருக்கலாம் என்ற சந்தேகந்தான் காரணமோ?**

○ மனிதஉரிமை விடயங்களில் இலங்கை அரசு அதிக அக்கறையுடன் செயற்படுவதாக, சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

★ **இதை மட்டுந்தான் அவர் சொன்னாரா? வேறு ஒன்றையுஞ் சொல்லவில்லையா? எனக் கேட்கின்றார், பாதிக்கப்பட்ட ஒருவர்.**

○ ஊழல் சம்பந்தமான வழக்குகள் பல, நீதிமன்றில் விசாரிக்கப்படாத நிலையிலும் அ. இ. அ. தி. மு. க. வுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலிற் போட்டியிடப் பல கட்சிகள் முயன்று வருகின்றன.

★ **ஊழல் பெரியதல்ல, உண்மை, பொய்யும் பெரிதல்ல ஆளல் பெரிதென்று அறிந்தோம் பராபரமே!**

○ படையினர் பொதுமக்களைத் தாக்குவதும், பின்னர் மன்னிப்புக் கேட்பதும் சர்வ சாதாரணமாகி விட்டது!

★ **செருப்பால் அடி! சிரிப்பால் நடி!**

○ ''மில்லு''க்குச் சென்ற பெண்ணின் சேலை, நாடாவில் சிக்கி, அப்பெண் விபத்துக்குள்ளானார்!

★ **மா அரைக்கும் ஆலை அம் ''மா''வையும் அரைக்கவில்லை என ஆறுதல் கொள்ளலாம்!**

○ லண்டனிலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸுக்குச் சென்று கொண்டிருந்த விமானத்தில் தவறுதலாக எச்சரிக்கைப் புரளிகிளப்பப்பட்டதாம்; பின்னர் பயணிகளிடம் மன்னிப்புக் கேட்கப்பட்டு, அவர்களுக்கு 'பிஸ்கட்' பெட்டிகள் வழங்கப்பட்டனவாம்!

★ **முதலில்'பிஸ்டல்' பயம்! பின்னர்'பிஸ்கட்' நயம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயணத்துக்குப் பாதுகாப்பு

# அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

சாவகச்சேரி

எஸ். நவரட்ணா (103785 ஏ), என். சுமிதா (103785 பி), எம், தனபாலசிங்கம் (103787 ஏ ), எஸ். மங்கயற்கரசி (103788 ஏ), எல். செல்வராணி (103788 பி), ஜே. கனகரட்ணம் (103793 ஏ), கே. கந்தையா (103795 ஏ), என். சுகந்தன் (103798 ஏ), கே. திருஞானசம்பந்தன் (103800 ஏ), எஸ். சிவதாஸ் (103802 ஏ), என். பாலசுந்தரம் பிள்ளை (103804 ஏ), பி. கங்காலிங்கம் (103806 ஏ), ரீ. சரோஜா (103807 ஏ). ஆர். பாலச்சந்திரன்(103808 ஏ), எஸ். சத்தியசீலன் (103809 ஏ )

ரீ. சுப்பிரமணியம் (103810 ஏ)எஸ். பரமேஸ்வரி(103812 ஏ), எஸ். சரவண முத்து 103812 பி), ஆர். ரீ. சரவண முத்து (103812 சி ), எஸ். சிவசுப்பிரமணியம் (103813 ஏ), ரீ. ஜசிந்தன்(103815ஏ), பி. பிரியதர்சினி (103819 ஏ). எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா (103820 ஏ), கே. ஸ்ரீகாந்தமலர் (103821 ஏ), கே. செல்வராணி (103622 ஏ), ரீ.அமுதஜோதி(1038233ஏ), ஆர். ரவிக்குமாரன் (103824 ஏ), எஸ். கே. கௌரி (103827ஏ), என். ராமலிங்கம் (103833ஏ),

எஸ். நந்தினி (103834ஏ), எஸ். லோகனா (103834பி), எஸ். திவீகர் (103834சி), கே. இந்திராணிதேவி (103836 ஏ), கே. குகாமினி (103836பி), கே. குசாயினி (103836சி), கே.குகாயிதன் (103836 டீ), எஸ்.கந்தசாமி (103836ஈ), கே.பரமானந்தன் (103837ஏ), எஸ்.விஜயசிறி(103838ஏ), எம். லக்ஷ்மி [103838பி], எஸ். விஜயசிறி [103838சி], எம்.கலைவாணி [103841ஏ), கே.விரதசாரணி [103841பி], கே. விரதசாரணி [103841சி], எம். கலைவாணி[103841டீ],

எம். லக்ஷ்மி [703842ஏ], ரீ. சுப்பிரமணியம் [103848 ஏ], கே. உமாகாந்தன் [103848ஏ], எஸ். கணபதிப்பிள்ளை [103851ஏ], ரீ. பொன்னரசி [103852ஏ], என். சிவபாக்கியம் [10386 0 ஏ ], பி. நகேஸ்வரி (103865 ஏ). பி. பிரகாஷ் (103865 பி). எஸ். நரகராஜா (103870 ஏ) வீ. நுது (103870 பி) எஸ். கரனர்தி (103872 ஏ) எஸ். சுமதி (103874 ஏ),ஸ்ரீ.இந்திரஜித் (103874 பி),

வீ. குமாரசுவாமி (103875 ஏ), பி. வர்ணகுலராஜா (103875 பி), பி. பாலசிங்கம் 103875 சி), கே. வர்ணகுலராஜா (103875டீ), எஸ், வர்ணகுலராஜா (103875ஈ). கே. உமாகாந்தன் (103877 ஏ), சின்னம்மா 103880 ஏ), ஆர்.சிங்கரப்பிள்ளை(103881 ஏ),என்.ஜெயந்தினி (103886 ஏ), என். அஜந்தா(103886 பி), என். ராஜன் (103886 சி), எம்.யோகரதம் (103887 ஏ), ஈ. அல்பிரட் 103893 ஏ), பி. அருளப்பு (103893 பி), கே.சின்னையன் (103894 ஏ),

கே.கனகலிங்கம் (103902ஏ) கே.ராம்சந்திரன்(105903ஏ), ரீ. கந்தசாமி (103719ஏ), ரீ. துஷாமினி (103723ஏ), கே. யோகானந்தன் (103955 ஏ), எஸ். சேனாதிராஜா (103972ஏ), எஸ். சேனாதிராஜா (103972பி), ஆர். ரவி (103983ஏ), எஸ். சின்னையா (103994ஏ), வீ. கனகலிங்கம் (103997ஏ), வீ. நடராசா (103998ஏ), எஸ். சுமதி (103998பி), என். கடாட்சன் (103998சி), ஆர். நடராஜா (105526ஏ), பி. முத்தையா (105548ஏ),

எஸ். சுந்தரம்பிள்ளை (105576ஏ), எஸ். ஜெயந்தி (105576பி), கே. இராஜதுரை (105595ஏ), எஸ். தியாகராஜா (105616பி), எம். ராமலிங்கம் (109905 ஏ), ஆர். அனுசா (109905 பி), கே. கந்தையா (503796 ஓ), ஜி. பூமணி (084929ஏ), எஸ் இராஜகுமாரி (094671 ஏ), கே. சின்னராஜா (094671பி), எஸ். கீர்த்தனா (094671சி), கே. சுபாஸ்கரன் (096528ஏ), கே. தவமலர் (096528பி), வீ. கிருஸ்ணமூர்த்தி (097535ஏ), ஏ. ரட்ணம் (097539ஏ),

எம். சண்முகரட்ணம் (097558ஏ), என் சிதம்பரப்பிள்ளை (ர97560ஏ), என். சிதம்பரப்பிள்ளை (097560 பி), எஸ். ருக்மணிதேவி (097569ஏ), எஸ். ஜசிகௌரி (097569பி), எஸ். ஜசோதரன் (097569சி) எஸ். ஜசீதா (097569டீ), எஸ். ஜசிந்தா (097569 ஈ), எஸ். ஜகிந்தா (097569 எவ்), பி. சரஸ்வதி (097573ஏ), ரீ.சிவகாமி (097573பி), ரீ. நகுலேஸ்வரன்(097575ஏ), என். ஸ்ரீ வள்ளிநாயகி (097575பி), என். உசாயினி (097575சி), கே.சீதேவிப்பிள்ளை(097582 ஏ)

வீ. சின்னத்துரை (097584 ஏ), ஏ. அமிர்தலிங்கம் (099487ஏ), ஏ. வசந்தினி (099487பி), ஏ. வசீகரன் (099487சி), ஏ. வள்ளிப்பிள்ளை (099487டீ), ரீ.தர்மலிங்கம் (099806பி), எஸ். சிதம்பரப்பிள்ளை (999808 ஏ), ஈன். பஞ்சாட்சரலிங்கம் (099818ஏ), வீ. ஸ்ரீதரன் (099820ஏ), ஜே. பிரேமலா (099825ஏ), எஸ். தர்மபூபாலன் (099829ஏ), கே. தேவராசா (099830ஏ), கே. நடராசலிங்கம் (099833பி), எஸ். சிவபாக்கியம் (099833 பி), எஸ். சூரியகுமாரன் 099833சி)

பீ. கந்தையா (0998334 ஏ), கே. சிவசோதி (099834 பி), வீ.சரண்யா(099836ஏ), வீ. சரண்யா (099836 ஏ), ஜெராணி (099838 ஏ), எ. எம். தர்மினி(099838 பி), கே. சின்னத்தம்பி (099839 ஏ), எஸ். வல்லிப்பிள்ளை (099839 பி), எம். செல்வரட்ணம் (099840 ஏ), எஸ். சின்னையா (099849 ஏ), வை. சுப்பிரமணியம் (099850 ஏ), கே. தெய்வேந்திரன் (099851ஏ,) வை. தெய்வேந்திரன் (099836ஏ), எம். பரமேஸ்வரி (099852ஏ).

டபிள்யு. நாகதேவன் (099853 ஏ), என். தேவவதனி (099853 பி), என். தடாயனி (099853 சி), என். மயூரி (099853 டீ), என்: சம்பாவெற் (099853 ஈ), வீ. சுதேஸ்வரன் (099854 ஏ), ஏ. தெய்வானை(099854பி), ஈ. ஞானராசா (099887 ஏ), ஜி. செல்வமலர் (099887 பி), ஜி. பிரசாந் (099887 சி), வை. தர்மநாதன் (100178 ஏ), ஏ பெருமாள் (101829 ஏ), பி. ஞானமலர்(101829 பி), ஐ. காராளபிள்ளை (101856ஏ),

சி. குமாரசுவாமி (101859 ஏ), கே. றேனுகா (101859 பி, எஸ். பாலசுந்தரன் (101863ஏ), வீ. ஞானச்சந்திரன் (101863பி), ஏ. நடராசபிள்ளை (101865 ஏ), எஸ். சிவராஜா (101869 ஏ), எஸ். செபமலர் (101869பி), எஸ். சுபாநந்தினி(101869சி), எஸ். கோபிநாத் (101869டீ), எஸ். சாந்தகோபால் (101869 ஈ), எஸ். பிரேம்நாத் (101869 எவ்), எஸ். நிகேதினி [101869 ஜி], ஐ. ரங்கநாதன் (101871 ஏ), என். கிருஷான்மூர்த்தி [101873ஏ], எஸ். சுந்தர் [101875 ஏ], கே. குருநாகல [101875 பி].

கே.ஜெனகநாதன் [101876 ஏ], வீ. முருகேசு [101884 ஏ], எம். தங்கமுத்து [101884 பி], என். தயாநிதி [101884 சி], எம். ஜனகரட்ணம் [101884 டீ], வீ. கணபதிப்பிள்ளை [101886 ஏ], கே. அற்புதமலர் [101886 பி], கே. கண்ணகி [101886 சி], எஸ். சின்னத்துரை ]101887 ஏ], எஸ். சஞ்சீவன் [101887 பி], எஸ். சின்னத்துரை 101887 சி], எஸ்.எஸ். பீவன் [101887 டீ], ஏ. சண்முகநாதன் [101893 ஏ]. எஸ். சற்குந்தன் [101894 ஏ).

ரீ. செல்லத்துரை (103837 ஏ), பீ. செல்லதுரை(103937 பி), சி. நடராசா (103940 ஏ), என். ராசம்மா (103940 (பி), எஸ். செல்வராணி (103950 ஏ), ஜி. சித்திரா (103952 ஏ), ரீ. ராசேஸ்வரி (103953 ஏ), ரீ. தயாளன் (103953 பி), எம். பியகுமார் (103953சி), கே. ராஜேஸ்வரி (103953 டீ), கே. வசந்தன் (103960ஏ), கே. சுகுந்தன் (103964பி), எஸ் மனோகரன் (103977 ஏ), எஸ். சின்னத்தம்பி (103977 பி), என். ராஜவிசாகன் (103978ஏ).

எஸ். சிவசாம்பவி (103989 ஏ, எஸ். சின்னையா (103989பி), எஸ்.விசாலாச்சி (103989சி), எஸ். சின்னப்பிள்ளை (103995ஏ), பி. விமலேந்திரநாதன் (103996ஏ), டபிள்யு. பாலராணி(103996 பி), வீ. கனகலிங்கம்(103997 ஏ), வீ. நந்தராசா (103998 ஏ), எஸ். சுமதி (103998பி), கே. கடாசன் (103998சி), எஸ். ரமேசினி (104001ஏ), பி. செல்லத்துரை (104001 பி), கே. லோகேஸ்வரன் (104002ஏ), எம். கணபதிப்பிள்ளை (104002பி).

கே.சரோஜாதேவி'104004 ஏ), கே. பிரிந்தன் (104004 பி), எஸ். சிவகரன் (104007 ஏ), வீ. பராசக்தி (104955 ஏ), ஆர். மீனாச்சிப்பிள்ளை (104957ஏ), ஒ. கிருஸ்ணகுமார் (104957பி), எஸ். கனகசபை (104960ஏ), கே. ராசரத்தினம் (104976ஏ), வீ. சுப்பிரமணியம் [104985 ஏ], பி. தவித்ரா [102208 சி], கே. ராசவதனி [102217 பி], ஆர். தம்புதவதி[102218 பி], பி. தயாவதி [10220 பி], ஏ. நிவேதன் [096325 ஏ].

(தொடரும்)

[ஐ-9-117)

## தேவார, திருவாசக சிந்தனைகளுடன் வேதாகம...

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

வடமொழியில் ஹிந்து என்றசொல் பிறருக்கு இம்சை செய்யாதவன் என்ற பொருளைத் தாங்கி நிற்கின்றது. இதனையே சுவாமி விவேகானந்தரும் முன்மொழிகிறார். சைவம் என்ற சொல்லும் இதே கருத்தையே முன்மொழிந்து நிற்கிறது. 'சைவம்' என்றால் ஜீவகாருண்யம் என்றுபொருள். நாம் பல சமயங்களில் இக்கருத்தை மறந்து வாழ்கின்றோம். எம் மத்தியில் இந்து, சைவம் என்ற போட்டியுணர்வுகள் இருப்பதில் அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் அனைவரும் சிவபிரானின் குழந்தைகள் என்ற உணர்வோடு இந்து, சைவப் போட்டி உணர்வுக்கு அப்பாற் சென்று பக்தி எழுச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே சிவனருள் அமுதம் என்ற நூலின் நோக்கமாக அமைந்துள்ளது.

இம்சை செய்யாதவன் இந்து. பிற உயிர்களை வருத்தாதவன் சைவன். இவ்வகையில் இந்து, சைவம் என்ற இரு சொற்களும் ஒரு கருத்தை வலியுறுத்தி நிற்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சைவம், இந்து ஆகிய இரு சொற்களும் ஒரு பொருளைத் தருவதாக அமைந்துள்ளது. சிவபிரான் ''அன்பே சொரூபமாக'' இருந்தருள்கிறான். இவ்வுண்மையை நாம் அனைவரும் உணர்ந்து கொள்வதே இன்றைய தேவையுமாகிறது. இதனையே திருமூலர் ''அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்'' என்றார். இதனை உணரவேண்டுமென்பதே சிவனருள் அமுதத்தின் குறிக்கோள் ஆகும்.

இந்நூல் தேவார திருவாசக சிந்தனைகளும்,வேத சிவாகம இதிகாச புராண சிந்தனைகளும் அமைந்து பொதிந்தவையாகக் காணப்படுகின்றன.

''இருந்தவாறும்
நல்லிமையோர்
ஏதமின்றி நால்வேதம்
புரிந்தவாறும் நஞ்சைப்
பாருய்ய அமுதாக்கித்
சொரிந்தவாறும் பூணமுலை
யாளோ டொன்றாய்
திரிந்தவாறும் வீடுவீடு
இரந்தவாறும் என்கொலோ''

என்கிறது 11 ஆவது பாடல்.

சிவபிரான் நஞ்சைப் பாருய்ய அமுதாக்கி தேவர்களைக் காத்தவன். இன்று நஞ்சுபோல் துன்பம் படர்ந்துள்ள வேளை சிவனருள் அமுதமென்று இந்நூல் பேர் தாங்கி வருவது எமக்குள்ள துன்பங்கள் நீங்குவதற்கு நல்ல அறிகுறியாக அமைந்துள்ளது. இன்று நம் மக்கள் துன்ப வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் பொழுது எம்மிடையே அமைந்துள்ள ஆலகால விஷம் அமுதாக மாறும் என்பது உறுதி. இதேபோல் இவருடைய பல பாடல்கள் உயரிய கருத்துக்கள் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன.

புறவழிபாடு, அகவழிபாடு என்பதில் இந்நூலாசிரியர் அகவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு உடையவர் என இந்நூலுக்கு அணிந்துரை, வாழ்த்துரை வழங்கியோர் குறிப்பிட்டுள்ளமை இந்நூலைப் படிக்கும் பொழுது தெளிவாகப் புலப்படுகிறது.

'அகத்தின் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்' என்பதை நூலாசிரியர் பல பாடல்களில் விளக்கியுள்ளார். புறவழிபாடு அகவழிபாட்டிற்கு ஈர்த்திழுத்துச் செல்வதாக அமையவேண்டும் என்பதே நூலாசிரியரின் உறுதியான கருத்து. அதனையேசைவ உலகும் வேண்டி நிற்கிறது.

### சைவசித்தாந்தக் கருத்து

சிவாலய வழிபாடு, விழாக்கள், சிவனடியார் தரிசனம், நல்லவற்றைக் கேட்டல், சிந்தித்தல், சிவ சின்னங்கள் அணிதல் என்பன ஆத்மீகத்தை வளர்க்கும் அதி உயர் சாதனங்கள். இதனை மக்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் பல பாடல்கள் அமைந்துள்ளன. அதே வேளை இறைவன் ஞானியர்க்கினியன் என்பதனையும் விளக்கியுள்ளார்.

இந்நூலாசிரியர் ஒரு தெய்வக் கோட்பாட்டையும் சைவ சித்தாந்தப் பொருளின் ஒருமைப்பாட்டையும் அத்வைதக் கொள்கையையும் பல பாடல்களில் விளக்கியுள்ளார். 30ஆவது பாடல்

''எங்கவர் தெய்வம் என்
நிலை பேணினும்
புங்கவர் எவர்க்கும்
புன்மைகள் செய்யார்
அங்கவர் நிற்கும் அவர்
நிலை கண்டு
இங்கவர் வருவர் இவன்
சிவனென்றே''

எனும் இப்பாடல் சிவஞான சித்தியாரில் யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார் வருவார் என்ற உயரிய கருத்தைத் தாங்கி நிற்கிறது. இவரது பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்து எளிமைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்நூல் வெளியீட்டில் உள்ள இன்னொரு சிறப்பம்சம் என்னவெனில், இந்நூல் மூலம் கிடைக்கும் அனைத்துப் பணமும் இந்நாட்டில் பூரண அமைதி ஏற்பட சிவாலயம் ஒன்றில் விசேட நாமஜெப ஓமம் ஒன்றை மேற்கொள்ளப் பயன்படுத்தவேண்டும் என நூலாசிரியர் தீர்மானித்திருப்பது தமிழ் மக்களின் தார்மீகப் பண்பில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கான உந்துசக்தியாக அமையவேண்டும்.

அனைவரும் சமயப் புகையுணர்வைக் கடந்து மதசார்பின்மை உள்ளவர்களாகச் சிவபிரானை வழிபடவேண்டும் என்பதே நூலாசிரியரின் கருத்தாகும்,

★

## வயோதிபரின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 11

பளைப் பகுதியில் அநாதரவான நிலையில் காணப்பட்டதாகத் தெரிவித்து பளை பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் வயோதிபர் ஒருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கோபாலபிள்ளை கனகரத்தினம் (வயது 70) என்ற வயோதிபரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்ட இச் சடலம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-15)

## தென்மராட்சியில் கசிப்பு வேட்டை

சாவகச்சேரி, ஜூலை 11

தென்மராட்சியில் மட்டுவில், நுணாவில், முசுறிப் பகுதி ஆகிய இடங்களில் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கசிப்பு வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

இக் கசிப்பு தேடுதலின் போது ஆயிரம் போத்தல் கசிப்பும் 700லீற்றருக்கு மேல் கசிப்புக்கு உபயோகிக்கும் கோடாவும் பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-31)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேரில் பவனிவரும் முருகனை நேரில் காண்போம்

சாவகச்சேரி சங்கத்தானை
ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத்தில்




இன்று தேரேறி
வள்ளி தெய்வானையுடன்
காட்சி தரும் முருகா!
அடியவர்களுக்கு அருள் தருவாய்.

**ரஞ்சனாஸ் நிறுவனம்**
நவீன சந்தை, சாவகச்சேரி.

(சி/8120)

## நீங்கா நினைவில் மூன்றாண்டு



**செல்வன் வேலு சனகன்**
(முன்னாள் மாணவன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

அன்னை மடியில் 21-02-1977
அமரன் அடியில் 13-06-1996

திதி: 11-07-1999

மூவாண்டு ஆனாலும் எம்துயர் மாறாது! என்றும் உன் நினைவுகளோடும் உணர்வுகளோடும் கலந்து வாழும்......

**அப்பா, அம்மா,**
**அக்காமார், தங்கை.**

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

[67282]

## மோட்டார் வாகனப் பதிவு

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தில் மோட்டார் வாகனம் மற்றும் வியாபார நிலையங்களின் பதிவு வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி பதிவு வேலைகளை திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 10 மணிக்கும் பகல் இரண்டு மணிக்குமிடையில் மேற்கொள்ளலாம் என செயலக அதிகாரி தெரிவித்தார், (ஐ – 152)

## நியமனம்

பட்டதாரிகளை மொழி பெயர்ப்பாளர்களாக நியமிக்கும் திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்குப்பிரதேச செயலகத்திற்கு இருவர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அன்னவதனி செல்வரத்தினம், உசந்தா சுரேந்திரா ஆகிய இருவருமே மொழி பெயர்ப்பாளர்களாக ஜூலை மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளனர். (ஐ–152)

## இவ்வருடம் நெற் செய்கை

தென்மராட்சி, ஜூலை 11

நான்கு வருட இடைவெளிக்குப் பின்னர் புலோப்பளை அறத்திவெளி நெல் வயல்களில் இவ்வருடம் காலபோக செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இப்பகுதியிலிருந்த படையினர் வேறு இடத்திற்குச் சென்று விட்டதால் இவ்வருடம் நெற்செய்கைக்கு இப்பகுதி விவசாயிகள் ஆயத்தங்களை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–117)

## விற்பனைக்குண்டு

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட ஓட்டோக்கள் விற்பனைக்குண்டு.

21 – 6429
202 – 3120

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
ச. செந்தூரன்,
இல, 4, மேதர் லேன்,
மானிப்பாய்.
(செல்லமுத்து மைதானத்திற்கு அருகில்).
(67252)

## அஸ்பெஸ்ரஸ் சிமெந்து தொழிற்சாலை

ஊழியர்களுக்கான

## முக்கிய அறிவித்தல்

தொழிற்திணைக்களத்தில் இரண்டாம் முறை பெயர் பதிவு செய்த சகல ஊழியர்களையும் சேவைக் கால கொடுப்பனவு கொடுக்கப்பட இருப்பதால் எதிர் வரும் 12—07—99 திங்கட்கிழமை 9.00 மணிக்கு தொழிற்திணைக்களத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்
**ஊழியர் சங்கம்**

(67328)

## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
லுமும்பா பல்கலைக்கழகம் போன்ற
ரஷ்ய பல்கலைக்கழகங்களுக்கு
கீழ்க்காணும் துறைகளுக்கு அனுமதி பெற்றுத்தரப்படும்.

1) மருத்துவம் (ஆங்கிலம்)
2) பொறியியல் (ஆங்கிலம்)
3) விஞ்ஞானம்
4) கணனியியல் (ஆங்கிலம்)
5) பொருளாதாரம்
6) ஏனைய துறைகள்

அனுமதி பெற்றுத்தர கட்டணம் எதுவுமில்லை.

விண்ணப்ப இறுதித் திகதி: 20 – 07 – 99
இறுதிச் சந்தர்ப்பம்.

நேரிலோ கடித மூலமோ உடன் தொடர்பு கொள்ள

**Dr. க. சிவனடியான்**
நவாலி.

[67257]

## நல்லூர்ப் பிரதேச சபை

## அறிவித்தல்

**ஆதனங்களை நன்கொடையாக கையளித்தல்**

நல்லூர்ப்பிரதேச சபைக்குட்பட்ட பலாலி வீதியில் சிறுவர் பூங்கா ஒன்றும், கைத்தொழிற் பயிற்சி நிறுவனம் ஒன்றும் அமைப்பதற்கு சபை தீர்மானித்து அவைகளுக்கான நிதியையும் ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே இவற்றை அமைப்பதற்கான காணியை குறிப்பிடப்பட்ட பகுதியில் நன்கொடையாக வழங்குவதற்கு விரும்பும் நலன்விரும்பிகள் எவராவது இருப்பின், தயவு செய்து தலைவர், நல்லூர்ப் பிரதேச சபை, திருநெல்வேலி என்ற விலாசத்துடன் 15 – 08 – 1999–க்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தங்கள் சேவைக்குரிய,
க. மணிபல்லவராஜன் ஜே. பி. யூ. எம்,
தலைவர்,
நல்லூர்ப் பிரதேச சபை.

நல்லூர்ப் பிரதேச சபை,
திருநெல்வேலி.

(சி/8145)



ஓம் முருகா! ஓம் முருகா!! ஓம் முருகா!!!

# கடந்த 32 ஆண்டுகளுக்கு மேல் தெய்வீக வழிபாட்டுக்குத் துணைபுரியும்

# காவடி மார்க் கற்பூரம்



யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும்.

**விநியோகஸ்தர்கள்:**

# PRABA TRADING CO.

31, GABOS LANE,
COLOMBO- 11.

Tel. 329426 Fax. 422750

## நின்று நிலைக்கும் ஜோதி மயம் காவடி மார்க் கற்பூரம் என்றும் தரும்

(சி/8122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

இந்து கௌரவமான குடும்பம் வயது 42, நட்சத்திரம் அத்தம், சுவிற்சர்லாந்தில் வேலை செய்யும் மணமகனுக்குப் படித்த அழகுள்ள மணமகள் தேவை. Sponser மூலம் அழைக்கப்படுவர். சாதகம் பிறந்த நேரம் குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 906, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [67195]

## விற்பனைக்கு

3 பரப்பு காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் வீட்டுத் தளபாடங்கள், காஸ் சிலிண்டர், மின்விசிறி, கோழிக் கூடு என்பனவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- இ. இராசகுமார் 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [67208]

யாழ்ப்பாணம் கோவில் வீதி இல. 18, [அருள் ஆச்சிரமத்திற்கு முன்பாக] சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கிறிஸ்ரி இராசநாயகம், இல. 18, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [67185]

அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. சிவானந்த் (கிரி) பொன்னாலை வீதி, (பழைய உப தபாற் கந்தோர் அருகில்), மானிப்பாய். (67236)

நல்ல இன மறி ஆட்டுக் குட்டிகள் இரண்டு விற்பனைக்கு உண்டு. அத்துடன் நல்ல இன அடை முட்டையும் உண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67315)

Brand new Mitsubishi Lancer wagon கார் விற்பனைக்கு உண்டு. Power Steering, Window, Mirror, Air Condition & Radio, Gas cylinderஇலும் ஓடக் கூடியது. விலை பேசித் தீர்க்கலாம். க. இராமலிங்கம், 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67278)

Sifana Diesel Engine லான்ட் மாஸ்ரர் புதியது பெட்டியுடன் விற்பனைக்கு. தொடர்பு: சாருஜன் போட்டோஸ்ரட் கொக்குவில் சந்தி, கொக்குவில். T. P. 2961 (சி/8136)

## இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அடைமுட்டையும், வாழைக் குட்டிகளும் உண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி. நல்லூர். (67314)

## தேவை

வீடியோ அன்ட் பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள

**விற்பனையாளரும் கணக்கு பதியுநரும்**

தேவை

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் அல்லது நேரில் வரவும்.

**புஸ்பா வீடியோ**
நெடுங்குளம் சந்தி,
அரியாலை.

(67316)

## மணமகன் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 17-09-69 இல் பிறந்த லக்கினத்தில் செவ்வாய் உள்ள அழகிய சிவந்த நிறமுடைய படித்த பெண்ணிற்கு உள்நாட்டில் தொழிலோ, வியாபாரமோ செய்யும் மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். சீதனமாக வீடு, வளவும் ஒரு இலட்சம் ரூபா காசும் கொடுக்கப்படும். விளம்பர இல. 908, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67258)

## O/L MATHS 99

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 34 வருட அனுபவமுடைய ஆசிரியனால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (67335)

## தேவை

ஓடக்கூடிய நிலையிலுள்ள Austin – 07 கார் தேவைப்படுகின்றது. தொடர்பு: காந்தி, இல. 43, செட்டித்தெரு, நல்லூர். தொலைபேசி இல. 2737. (67321)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி [Broilers] கல்பேட்ஸ்என்பனவிற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40,கோயில் வீதி, யாழ்ப்பாணம். (67333)

## பௌதிகவியல் A/L

பௌதிகவியல், இணைந்த கணிதம் கற்பிக்கப் பயிற்சி பெற்ற ஆசிரியரினால் குறுகிய காலத்தில் முழுப்பாடத்திட்டமும், மிகச்சிறப்பாகக் கற்பிக்கப்படும். வகுப்புக்கள் நடைபெறுகின்றன. [தனிப்பட்ட முறையிலும்] சந்திப்பு 3 மணிக்குப்பின் தினசரி, R. பாலசுப்பிரமணியம் B. Sc (Cey) Dip.in Ed, 17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (67331)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 — 08 — 1900 | 23 — 06 — 1998 |

### திருமதி இராசம்மா கந்தையா

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
பல்லாண்டு வாழ்ந்து பலபேரை வாழ வைத்த
எம் அன்னையை எந்நாளும் மறவா
மனதில் போற்றி தீபம் ஏற்றிடுவோமே.

பிள்ளைகள், சகோதரர்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.

பட்டின சபை ஒழுங்கை,
மானிப்பாய். (76318)

## ஒளிரும் நினைவலையில் ஓராண்டு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 — 11 — 1925 | 21 — 06 — 1998 |

### திருமதி அன்னப்பிள்ளை நாகலிங்கம்

திதிநாள்: 11 – 07 – 99 ஞாயிறு

எங்கள் உள்ளங்களில் ஒளிவீசி என்றும் நிலையாக நின்றியக்கும் எமது அன்புத் தெய்வமே! எம்மைப் பிரிந்து ஆண்டொன்று சென்றது. ஆனாலும் நினைவலைகள் ஓயவில்லை; ஒருகணமும் நீங்காது உம் நினைவு.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

கைதடி தெற்கு,
கைதடி. (67312)

## ST. HENRY' S DAY
## கல்லூரித்தின விழா

[ 13 — 07 — 1999 ]

யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை

எமது கல்லூரித் தினவிழா 13—07—99 செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

எமது கல்லூரியில் பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளையும் பழைய மாணவர்களையும் கல்லூரி அபிமானிகளையும், நலன்விரும்பிகளையும் இவ் விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஹென்றியரசர் குடும்பம்
HENRICIAN FAMILY.

இளவாலை.

(67324)

## சதுரங்கப் போட்டி
## பரிசளிப்பு விழா

மக்கள் வங்கி வட வலயத்தின் அனுசரணையுடன் யாழ். மத்திய கல்லூரி சதுரங்க கழகத்தினரால் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் யாழ். மத்திய கல்லூரி சதுரங்கக் கழகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

காலம்: 12–07–1999 திங்கள் பி. ப 2. 30 மணி

இடம்: யாழ். மத்திய கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்: திரு. தா. அருளானந்தம்
(கோட்டக்கல்விப்பணிப்பாளர் — யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற இப்போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெறும் பாடசாலை மாணவர்களின் பெயர் விவரம் பாடசாலைகளினூடாக அறிவிக்கப்பட்டுள்ளன. அறிவித்தல் கிடைக்கப்பெறாவிடினும் பரிசில்கள் பெறும் மாணவர்கள் பரிசளிப்பு விழாவில் கலந்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**மக்கள் வங்கி வட வலயமும்,**
**மக்கள் வங்கி விளையாட்டுக்கழகமும்.**

(67330)





மூவ் இடுப்பு வலி, மூட்டு வலி, முதுகு வலி, வீக்கம், தசைப்பிடிப்பு என்பவற்றுக்கான உடனடி நிவாரணி.



இப்போது 25 / 50 கிராம பேக்குகளில் கிடைக்கிறது

வலியில் ஆ... முதல்... ஆஹா வரை

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்,
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்

(சி/8051)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்

# 15 வயது சிறுமி மரணம் கொலை எனத் தீர்ப்பு

வவுனியா, ஜூலை 11

வவுனியாவில் ஜூன் 16ஆம் திகதி விமானப் படை அதிகாரி ஒருவரின் மனைவியினால் அடித்துக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் 15 வயதுச் சிறுமியின் மரணம் கொலை என வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் எஸ். தியாகேந்திரன் தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கு வியாழனன்று வவுனியா நீதிமன்றத்தில் நடைபெற்றது.

கொல்லப்பட்ட சிறுமியின் சடலத்தைப் பரிசோதனை நடத்திய கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி சமர்ப்பித்த சட்ட வைத்திய அறிக்கையை அடுத்தே இந்த மரணம் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரி எஸ். அஸ்வரின் மருத்துவ அறிக்கையில் சிறுமியினுடைய உடலில் 77 அடி காயங்கள் இருக்கின்றன என்றும் தலைப் பகுதியில் இரத்தக் கசிவு ஏற்பட்டதனால் இந்த மரணம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக 12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

எஸ். கலா என்னும் இந்தச் சிறுமியின் கொலை தொடர்பாகத் தற்பொழுது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் விமானப்படை அதிகாரியின் மனைவியான திருமதி நிலானி சல்கபுவுக்கு எதிராக கொலைக்குற்றச்சாட்டுச் சுமத்தி வழக்குத் தொடரப்பட உள்ளது.

(இ-164)

## நிம்மதியாக...

[ஐந்தாம் பக்கத் தொடர்]

தோம். இனி மேன்மேலும் தொடர்ந்து கஷ்டப்பட வேண்டியதுதான் எமது விதியாகி விட்டதே ......!—

எங்கள் கஷ்டத்தைப் போக்குவதற்காக அவர் தனக்குத் தெரிந்த சகல வேலைகளுக்கும்சென்றுவருவார் 1996ஆம் ஆண்டு வருமானம் எதுவுமில்லாத நிலையிலே அரியாலையிலுள்ள ரவி கராஜ்ஜில் வேலைக்குச் சேர்ந்தார்.

### பத்தாம் நாள் திரும்பவில்லை

வேலைக்குச் செல்லத் தொடங்கியவுடன் கல்வியங்காட்டிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்கு இடம்பெயர்ந்தோம். அங்கிருந்து பத்து நாள்கள்தான் அரியாலைக்கு வேலைக்குச் சென்று வந்தார். பத்தாவது நாள் 1996 ஒகஸ்ட் 19ஆம் திகதி வேலைக்குச் சென்றவர் தான் வீடு திரும்பவில்லை. ஏனையவர்கள் போலத் தேட வேண்டிய இடங்களிலெல்லாம் தேடினோம். பலருடன் தொடர்பு கொண்டோம். அவர்எங்கும் இல்லையென்று கைவிரிக்கப்பட்டது. காணாமற் போனோர் பட்டியலில் எனது கணவரும் சேர்க்கப்பட்டார்.

நாள்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் என காலம் கடந்ததுதான்மிச்சம்; அவர் திரும்பி வரவேயில்லை.

ஒவ்வொருநாளும் வேலைக்குச் சென்று திரும்பும் போது பிள்ளைகளுக்கு பலகாரம் ஏதாவது வாங்கி வருவார். அன்று மாலையும் பிள்ளைகள் அப்பாவின் பலகாரத்தை எதிர்பார்த்து ஏமாந்து விட்டார்கள், இப்பொழுது நிரந்தரமாகவே எனது குழந்தைகள் ஏமாற்றப்பட்டு விட்டன.

அவர் காணாமற்போன போது மூத்தவரான சர்மிலனுக்கு 5 வயதாகவும் இரண்டாவது குழந்தையான கௌதனுக்கு ஒரு வயதாகவும் இருந்தது. மூன்றாவது குழந்தையான சியாம்சன் இரண்டுமாதக்கருவாக வயிற்றிலே வளர்ந்து கொண்டிருந்தான்.

### கடவுளின் சோதனையா?

தற்பொழுது உதவிகளோ, வசதிகளோ அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் சமுர்த்தித்திட்டத்தின் கீழ் மாதாந்தம் 250 ரூபாவுக்குரிய உலர் உணவுப் பொருள்கள் மட்டுமே எமக்குக் கிடைக்கும் ஓர் உதவியாகும்.

கணவரின் பிரிவினால் மனமுடைந்து யோசித்து யோசித்து நான் நோயாளியாகி விட்டேன். எனது குழந்தைகளின் எதிர்காலத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறேன் என்று தெரியாமல் திண்டாடுகின்றேன்.

சில வேளைகளில் கூலி வேலைகளுக்குச் சென்று வருவேன். எனதுஉடல்நிலை காரணமாக அதனைக்கூட தொடர்ந்து செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன்.

நான் ஜி. சீ. ஈ. சாதாரண தரம் வரை கற்றிருக்கிறேன் எனது குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு எனக்கு நிரந்தர தொழில் வேண்டும். அதனைத் தான் நான் எதிர்பார்க்கிறேன்.

நாங்கள் திருமணம் செய்த பொழுது இருபரப்புக் காணி எனது பெற்றோரால் தரப்பட்டது. அந்தக் காணியில் அவர் இருக்கும் பொழுதே குடிசை ஒன்று அமைத்தோம். அப்பொழுது வேயப்பட்ட கூரை அழிந்துவிட்டது, அவர் திரும்பி வந்ததும் குடிசையினைப் புரைமைப்போம் என்றிருந்தோம் தற்பொழுது இதனை புனரமைக்க முடியாத நிலையில் உள்ளோம். கடவுள் எம்மை இப்படியா சோதிக்க வேண்டும்?— என்றார்.

அல்வாய் கொற்றாவத்தையைச் சேர்ந்த சதீஸ்குமார் 1989 ஆம் ஆண்டு மீசாலையைச் சேர்ந்த சாந்தினியை காதலித்துக் கரம் பிடித்துக் கொண்டார்.

ஏழு வருடங்கள் இணைபிரியாமல் வாழ்ந்த இவர்களின் வாழ்க்கையில் 1996 ஒகஸ்டில் புயல் வீசியது. இந்தப் புயலில் சிக்கிய சதீஸ் தொலைந்தே போய்விட்டார்.

யாழ். குடாநாடுமுழுவதும் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தபோது நிம்மதியாக வாழமுடியும் என்ற நம்பிக்கையுடன் மீளக் குடியமர்ந்த சதீஸின் குடும்பம் ஒரு சில மாதங்கள் தான் நிம்மதியாக வாழ்ந்தது.

விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்று கூறப்படும் இந்த மண்ணிலிருந்து சதீஸ் போன்று இன்னும் பலர் விடுவிக்கப்படாத உலகிற்கு சென்றுவிட்டதாக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தியின் பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கின் முதலாவது எதிரியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ யாழ். நீதிமன்றத்தில் தெரிவித்த வாக்குமூலத்திலிருந்து தெரிய வந்துள்ளது.

சதீஸின் மனைவி போன்று இன்னும் எத்தனை இளம் பெண்களின் நெற்றிப் பிரதேசம் பொட்டின்றியும் தலை பூ இல்லாமலும் வாடி வதங்கப்போகின்றனவோ!

தனது அன்புக்குரிய துணைவியையும் பிள்ளைச் செல்வங்களையும் காப்பாற்றுவதற்காகக் கடினமாக உழைத்த அப்பாவியான சதீஸ் சட்டத்துக்குப் புறம்பாகப் பிடித்துச் செல்லப்பட்டு மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டது தான் அரச நீதியா? மனித உரிமை பேணுதலா?

✠

## பண்டிதமணி நூற்றாண்டு விழா

சாவகச்சேரி, ஜூலை 11

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நூற்றாண்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 1.30 மணிக்கு அவர் பிறந்த இடமான மட்டுவிலில் அவரது ஆரம்ப பாடசாலையான மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாசாலையில் இளைப்பாறிய அதிபர் ஆ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பண்டிதமணியின் மணி மண்டபத்தில் அவரது உருவப் படத்திற்கு மலர்மாலை சூட்டலுடன் — விழா ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆசியுரையை சிவஸ்ரீ கு. சோமசுந்தரக்குருக்களும் — ஆரம்ப உரையை தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் நிகழ்த்துவர்.

சிறப்புரைகளில் 'மட்டுவிலும் பண்டிதமணியும்' என்னும் பொருளில் இளைப்பாறிய அதிபர் அ. குமாரவேலுவும்,

'நல்லாசிரியர்' என்னும் பொருளில் யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராசாவும் —

'சைவத்தை நோக்கிய பண்டிதமணி' என்னும் பொருளில் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரமும், —

'பண்டிதமணியும் கவிதை ரசனையும்' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அ. சண்முகதாஸும் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வினை மட்டுவில் இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

(ஐ-31)

## பயிற்சி நெறி

காரைநகர், ஜூலை 11

முன்பள்ளி ஆசிரியைகளுக்கான குழந்தைமையக் கல்வி சம்பந்தமான பயிற்சிநெறி காரைநகர் போரூட் நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்ட இப் பயிற்சி நெறியில் சுமார் 15 முன்பள்ளி ஆசிரியைகள் கலந்து கொள்கின்றனர் இப்பயிற்சி நெறி தொடர்ந்து ஆறு மாதங்கள் வரை நடைபெறும்.

(ஐ - 7)

## மீனவர் சங்க தலைவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

கடந்த 5 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட கொழும்புத்துறை மீனவர் சங்கத் தலைவர் பரமராசா குசேலராசா நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

512 ஆவது படையணித் தலைமையகமான ஞானம்ஸ் ஹோட்டலில் வைத்து இவர் படை அதிகாரிகளால் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலக இணைப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவர் உடனடியாக அவரது வீட்டில் உறவினர்களிடம் இணைப்பதிகாரியால் கையளிக்கப்பட்டார்.

(இ-6)

## விளையாட்டு நிகழ்வுகள்

'உதயன்' நிறுவன ஆதரவுடன் யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 4 மணி — யாழ். பல்கலைக்கழக வி. க. அணி எதிர் அரியாலை ஐக்கிய வி. க. அணி.

★ பிற்பகல் 5 மணி — காந்தி நிலைய வி. க. அணி எதிர் கே. கே. எஸ் ஐக்கிய வி. க. அணி.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டுப் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் — விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 8 – 30 மணி — யாழ். பல்கலைக்கழக அணி எதிர் சென்றலைட்ஸ் வி. க. அணி.

★ பிற்பகல் 1–30 மணி — யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அணி எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய [கே. சீ. சீ. சீ.] விளையாட்டு அணி

[இ]

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழாவை ஒட்டி பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற்று வந்த— 16 அணிகள் பங்குபற்றிய விலகல் முறையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாவது சுற்று முடிவடைந்து — மூன்றாவது சுற்றுக்காக நான்கு அணிகள் தெரிவாகியுள்ளன.

மூன்றாவது சுற்றின் முதல் ஆட்டங்கள் நாளை திங்கட்கிழமை முதல் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4-00 மணி — சென். அன்ரனிஸ் வி.க. அணி எதிர் சென். மைக்கல் வி.க. அணி.

★ பிற்பகல் 5-15 மணி — யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அணி எதிர் குருநகர் பாடுமீன் வி. க. அணி.

இந்த சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட நான்கு அணிகளுள் — இரண்டாவது சுற்றுப்போட்டிகளில் — யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அணி பாரதி வி. க. அணியையும் குருநகர் பாடுமீன் வி.க. அணி கோண்டாவில் மத்திய வி.க. அணியையும் சென். அன்ரனிஸ் அணி அரியாலை ஐக்கிய வி. க. அணியையும் சென் மைக்கல் வி க. அணி யாழ். பல்கலைக் கழக அணியையும் வெற்றி கொண்டதன் மூலமே நாளை முதல் நடைபெறும் இறுதிச் சுற்றுப் போட்டிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டன.

[இ]

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழாவையொட்டி நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதி நாள் போட்டிகள் இன்று ஞாயிறு மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

இறுதிப் போட்டியில் யாழ், பல்கலைக்கழக அணியும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

[இ]

★ ★ ★

மக்கள் வங்கி நடத்தும் மென்பந்துகிரிக்கெட்போட்டியில் இன்று காலை 8-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அரை இறுதி ஆட்டத்தில் யாழ். செயலக விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடபிராந்திய போக்குவரத்துச் சபை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

[இ-5]

## மரண அறிவித்தல்

### செல்லையா மோகனசுந்தரம்

(முன்னாள் எக்ஸ்ரே இயக்குநர்,
அரசினர் வைத்தியசாலை, பருத்தித்துறை.)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை 1ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மோகனசுந்தரம் (முன்னாள் எக்ஸ்ரே இயக்குநர், அரசினர் வைத்தியசாலை, பருத்தித்துறை) 10-07-99 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வசுந்திராதேவியின் அன்புக் கணவரும் தர்மேந்திரா (இந்தியா), தர்சினி (பிரதேச சபைச் செயலகம், சங்கானை), தீபா (கல்வித் திணைக்களம், சாவகச்சேரி), தெய்வேந்திரா (மாணவன், யா/ ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி நாகரட்ணம் தங்கேஸ்வரராசா அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

இன்று 11-07-99 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் 1 ஆம் கட்டை நீண்டியம்பற்றை பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக் கிரிகைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி மோ. வசுந்திராதேவி
(மனைவி)

1 ஆம் கட்டை,
பருத்தித்துறை.

( -8153)

CEFE

உங்களது தொழில் வெற்றியடைய வேண்டுமென விரும்புகின்றீர்களா?
நிச்சயமாக ஆம் என்பதே உங்களுடைய பதில்.
எங்களது விருப்பமும் அதுவே,
அப்படியாயின் CEFE நிச்சயமாக உங்களுக்குரிய பயிற்சி நெறியே தான்!
தொழில் முயற்சியாளர்களுக்கு வெற்றிக்கான வழியைக் காட்டும்
CEFE இன் பாதையில் ஐந்தாவது பயிற்சிப் பட்டறை மிக விரைவில்...!

மேலதிக விவரங்களுக்கு:
Coordinator/CEFE Unit,
University of Jaffna,
University City Hall,
Jumma Mosque Lane, JAFFNA.

(G7/3522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலர் உணவு நிவாரணம்...

(முதலாம் பக்கத் தொடர்)
வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணம், யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த ரூபா ஆயிரத்து 500 க்கு குறைந்த மாத வருமானம் பெறும் குடும்பங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நடைமுறையை மீளக் குடியமர்ந்த திகதியில் இருந்து தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு மட்டுமே செயற்படுத்த வேண்டுமென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்நாயகம் சுற்றறிக்கை மூலம் தெரிவித்திருந்தும் யாழ். மாவட்டத்தில் இது தொடர்பான எந்தவிதமான நடவடிக்கையும் பல்வேறு காரணங்களின் நிமித்தம் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது யாழ். மாவட்டத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் இதன் காரணமாக மேற்படி சுற்றறிக்கையை அமுல் நடத்துவதுடன் நாட்டின் ஏனைய பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்படும் சமுர்த்தித் திட்டத்தினை அமுல்படுத்துமாறும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனை 01-07-1999 இல் இருந்து செயற்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. இதனால் தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச நிவாரணத்தினை படிப்படியாகக் குறைத்து அதற்குப் பதிலாக சமுர்த்தித் திட்டத்தின் கீழ் வறுமை நிவாரணம் வழங்கப் படவுள்ளது.

எனவே இதனை யாழ். மாவட்டத்திலும் செயற்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மீளக்குடியமர்ந்து ஆறு மாதம் முடிவுற்று மீளக்குடியமர்ந்த கொடுப்பனவாக ரூபா 5 ஆயிரம் பெற்றவர்களை மேற்படி சமுர்த்தித் திட்டத்தில் இணைப்பதன் மூலம் நடைமுறைப்படுத்தலாமென கருதப்படுகின்றது.

எனவே இதன் பொருட்டு தங்கள் பகுதியில் மீளக் குடியமர்ந்தவர்களை வறுமை நிவாரணத்தின் கீழ் 01-08-99 ஆம் திகதியில் இருந்து இணைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதுடன் இந்தத் திகதிக்கு முன் மீளக்குடியமர்ந்து ஆறு மாதங்கள் பூர்த்திசெய்தவர்களில் மீளக்குடியமர்ந்த கொடுப்பனவாக ரூபா 5 ஆயிரம் பெற்றவர்களின் விவரங்களை காலம் தாழ்த்தாது அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-175)


வண்ணார்பண்ணை காட்டுத்துறை

**அம்பலவாண -**
**விக்கினேஸ்வரப்பிள்ளையார் கோயில்**
**சண்டேஸ்வரப் பெருமான் உற்சவதின**
**விசேஷ சொற்பொழிவு**

விடயம்:–
"விநாயகர் பெருமை"

சொற்பொழிவு வழங்குபவர்;–
திரு. ஜெயரட்ணம் கோகலே
[பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை]

காலம்:– 11 - 07 - 99 ஞாயிறு மாலை 4.30 மணி

[67337] விழா உபயகாரர்



**கணக்கீட்டு மாணவர் கவனத்துக்கு**
நாளைமுதல் பெற்றுக் கொள்ளலாம்
**நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள்**

ஆக்கம்: D. SAM
வெளியீடு: D. M. I.

கிடைக்கும் இடம்;
I. பூபாலசிங்கம் புத்தகசாலை
II. ஶ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

(C/8150)



**இளவாலை மறைக்கோட்டத்தினால்**
நடத்தப்படும்
**மீட்டல் வகுப்புக்கள்**

**ஜி. சீ. ஈ. (உ.த) கிறிஸ்தவம்**
இடம்: மானிப்பாய் மகளிர் கல்லூரி
நாள்: ஜூலை 12, 13, 14
நேரம்: காலை 9 மணி தொடக்கம் – 12.30 மணி வரை
பிற்பகல் 2மணி தொடக்கம் – 4.00 மணி வரை

ஆர்வலர்களைப் பங்குபற்றிப் பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

– பங்குத் தந்தையர்கள்
இளவாலை மறைக்கோட்டம். (67319)



**கணக்கீடு**
D. Sam
**AL/99 கணக்கீட்டுப் பரீட்சை**
ஜூலை — 14, 15

**அறிவுறுத்தல்கள்:-**
★ அனுமதி அட்டையுடனேயே பரீட்சைக்குச் சமுகமளிக்க முடியும்.
★ அனுமதி அட்டை கிடைக்காதோர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
★ பரீட்சைக்கு அனுமதி பெற்றும் சமுகம் அளிக்காதுவிடின் வினாப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.

D. M. I.
Stanley Road,
Jaffna.
(சி/8151)


## சாரம் அணிந்து ..

[முதலாம் பக்கத் தொடர்]
பாய் போன்று பாவித்து கடல் தடை எல்லைகளைத் தாண்டிச் சென்று தொழிலில் ஈடுபடுகின்றார்கள் என்றும் —

எனவே தான் சாரத்துடன் தொழிலுக்குச் செல்லாமல் காற்சட்டை அல்லது நீளக் காற்சட்டை அணிந்து தொழிலுக்குச் செல்லுமாறு உத்தர விட்டதாகவும் —

உள்ளாடைகளுடன் செல்லுமாறு உத்தரவிடவில்லை என்றும் —

இனிமேல் கடற்றொழிலுக்குச் செல்பவர்கள் சாரம், சேலை, விரிப்புகள் போன்ற பாயாகப் பாவிக்கக்கூடிய துணிகளை எடுத்துச் செல்லக் கூடாது என்றும் —

கேணல் ஜெயதிலக தெரிவித்ததாக எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

இதேவேளை சாரத்துடன் மீன் பிடிக்கச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை ஆட்சேபித்து குருநகர் கடற்றொழிலாளர்கள் நேற்றுக் குடாக் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை.

கடற்றொழிலாளர்களின் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து குருநகர்க் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைக் குருநகர் இராணுவப் பொறுப்பாளர் இராணுவ முகாமுக்கு நேரில் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

கடற்றொழிலாளர்களின் பகிஷ்கரிப்புக்கான காரணத்தைச் சங்கப் பிரதிநிதிகள் இராணுவ அதிகாரியிடம் விளக்கினர்.

(இ-5-6-51)

## வாசுவை ...

(முதலாம் பக்கத் தொடர்)
ததே.

அவர் மீண்டும் கட்சியில் இணைய விரும்பியதை அடுத்து செயற்குழு நேற்றுக் கூடி இருந்தது. (இ-9)


**றோயல்**
சாவகச்சேரி.
**G.A.Q வகுப்புக்கள்**
ஆரம்பமாகவுள்ளன.
★ பதிவுகள் எம்மால் செய்துதரப்படும்.
முடிவு திகதி: 25 - 07 - 99

A/L 2000, 2001
வணிகக் கல்வி
Mr. சத்தியகுமார் (B.Com.)
நடைபெறுகின்றது.
(67341)


## வன்னிக்கான ...

(முதலாம் பக்கத் தொடர்)
சம்பந்தமான அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

மேஜர் ஜெனரல் பலகல்ல வவுனியா அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

மாங்குளத்தில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு திறக்கும் பாதையைப் படையினர் தமது முன்னேற்ற முயற்சிக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற உத்தரவாதத்தையே விடுதலைப் புலிகள் கோரி இருப்பதாக நம்பப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் இருந்து வவுனியா வந்த நூற்றுக்கணக்கான மக்கள் தாம் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு வவுனியா அரச அதிபரைக் கேட்டிருந்தனர்.

இதனை அடுத்தே அரச அதிபர் மேஜர் ஜெனரல் பலகல்லவைச் சந்தித்தார்.

(இ-5-164)

## வானொலிக்குள் ...

[முதலாம் பக்கத் தொடர்)
அந்த வானொலிப் பெட்டியைத் திருத்துவதற்காகக் கொடுத்த நபர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். (ஐ-8)

## புலிகளின் ..

[முதலாம் பக்கத் தொடர்]
அமைச்சரையும் அவரது குழுவினரையும் கொழும்பில் இருந்து அங்கு ஏற்றிச்சென்ற இரு ஹெலிகள் முகாம் பகுதியில் தரித்து நின்றன என்றும் —

புலிகளின் ஷெல் வீச்சு ஆரம்பித்ததும் அந்த ஹெலிகளை அங்கிருந்து கிளம்புமாறு இராணுவத் தளபதி உத்தரவிட்டார் என்றும் —

ஹெலிகள் இரண்டும் அந்தப்பகுதியில் இருந்து கிளம்பி ஓரிரு நிமிடங்களில் ஷெல்கள் அப்பகுதியில் வந்து வீழ்ந்ததாகவும் —

சம்பவத்தை நேரில் கண்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சில நிமிடங்கள் தாமதித்திருந்தால்கூட அந்தக் ஹெலிகள் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஷெல் வீச்சின்போது அமைச்சர் ரத்வத்தவும், முப்படைத் தளபதிகளும் ஆபத்து ஏதுமின்றித் தப்பி கொழும்பு போய்ச் சேர்ந்தமை தெரிந்ததே. (ஐ-99)

## விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 11
டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கேடயத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் மோதும்.

இப்போட்டி ஈ.எஸ். பேரம்பலம் ஆதரவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

(இ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை, 11
யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம். யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை திங்கட் கிழமை நடைபெறும் பெண்கள் பிரிவு ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:

★ பிற்பகல் 4.30 மணி — யாழ். பல்கலைக்கழக வி. க. அணி எதிர் பற்றீஷியன் (கிறீன்ஸ்) வி.க. அணி.

(க–1)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)
இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. படையினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்துத் தெரியவரவில்லை. [இ–5]

## முறைப்பாடுகளைப்...

(முதலாம் பக்கத் தொடர்)
வர்கள் தொடர்பாக இதுவரை முறைப்பாடு செய்யாதவர்கள் மேற்குறிப்பிட்ட நான்கு நாள்களும் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு நேரில் வந்து தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்)
பதி நேபாளம், பூட்டான் தலைவர்களைச் சந்தித்து உரையாடினார். இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள், பிராந்திய ஒருமைப்பாடுகள் என்பன பற்றி இந்தக் கலந்துரையாடலில் கவனஞ் செலுத்தப்பட்டது.

(இ-9)


**மரண அறிவித்தல்**

**ஆசைப்பிள்ளை கனகம்மா**

கலைமகள் வீதி, அரியாலை மேற்கைச் சேர்ந்த ஆசைப்பிள்ளை கனகம்மா 10 - 07 - 99 சனிக்கிழமையன்று மாலை 141 B, Sea View (சீவியூ) Road, திருகோணமலையில் காலமானார்.

இவர் க. ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஆ. ஜெகநாதன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், பனை அபிவிருத்திச்சபை, யாழ்ப்பாணம்), ஆ. ஜீவநாதன் (பதில் பிரதம உணவுப் பரிசோதகர், யாழ். மாநகர சபை), ஆ. இரகுநாதன் (கணக்காளர், உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு — கிழக்கு மாகாண சபை, திருகோணமலை), ஆ. நேமிநாதன் (வேலை மேற்பார்வையாளர், யாழ். மாநகரசபை), அமரர் ஆ. சந்திரநாதன் (முன்னாள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உப வேலைப் பரிசோதகர்), திருமதி ஜேம்ஸ் அருள்நேசன் மஞ்சுளா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜேம்ஸ் அருள்நேசன் ஜீவானந்தம் (கனடா), திருமதி வினிதா தேவகுணமலர் — ஜெகநாதன், திருமதி டைநேஸ்வரி — ஜீவநாதன், திருமதி சொர்ணலதா — இரகுநாதன் (ஆசிரியை, திருகோணமலை), திருமதி பாமினி — நேமிநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சாமுவேல், தேவகுமார், சொலமன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், நிரேயன், சோபின்யா, கௌசன்யா, பானுயா, சிறிகஜன், சந்திரகாகுந்தன், வேனுயா, பிளஸ்யினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பிள்ளைகள்
ஆ. ஜெகநாதன், ஆ. ஜீவநாதன்,
ஆ. இரகுநாதன், ஆ. நேமிநாதன்,
திருமதி ஜேம்ஸ் அருள்நேசன் மஞ்சுளா.

50/3, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (சி/8154)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11 - 07 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org